

# சத்தியமாவது என்ன




திருமறை அறிஞர்

**பாஸ்டர் A. கிறிஸ்டோபர்**

# சத்தியமாவது என்ன?

ஆசிரியர்
திருமறை அறிஞர்
Rev. Dr. **அ.கிறிஸ்டோபர்**, M.A., D.D.,

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
நேரு வீதி, சூரம்பட்டி,
ஈரோடு – 9. தென் இந்தியா

| | | |
|---|---|---|
| FIRST EDITION | - | 1994 |
| RE EDITION | - | September 2008 |
| TOTAL COPIES | - | 2000 |
| COPY RIGHT | - | TO AUTHOR |
| PRICE | - | Rs. 40.00 (IN INDIA) |
| BOOK NUMBER | - | T - 16 |

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SURAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**

## அணிந்துரை

திருமறைப் பெரியார்
**மறைதிரு. யோபு ஞானப்பிரகாசம்**
இந்தியன் பெந்தகொஸ்தே அஸம்பிளீஸ்
கோயம்புத்தூர் – 12.

பாஸ்டர் கிறிஸ்டோபர் அவர்களின் சத்தியமாவது என்ன? என்ற புத்தகத்திற்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். சத்தியத்தை மறுதலிக்கும் கூட்டம் அதிகமாக எழும்பி வரும் இக்கடைசி காலத்தில் இப்படிப்பட்ட புத்தகங்கள் வெளி வருவது அவசியம்.

இப்புத்தகத்தின் ஆசிரியர் மிகச்சிறந்த வேத அறிவும் உபதேசப் பிடிப்பும் உள்ளவர். சத்தியத்தை நிதானமாய்ப் பகுத்து வகுத்துப் போதிக்கும் கிருபை பெற்றவர். பெரியார் மாவட்டத்தில் உள்ள எங்கள் IPA சபைகளின் மத்தியப் போதகராகிய இவர் அநேக ஆவிக்குரிய புத்தகங்களை ஆழமான கருத்துச் செறிவோடு படைத்திருக்கிறார்.

இந்தப் புத்தகத்தை விசுவாசிகள் மட்டுமின்றி ஊழியர்களும் வாங்கி வாசித்து வசன ஆதாரத்தோடு சத்தியத்தைக் கற்றுக் கொண்டு சபைகளை பலப்படுத்த வேண்டும்.

பாஸ்டர் கிறிஸ்டோபர் இன்னும் அநேக புத்தகங்களை எழுதி வெளியிட நல்ல ஞானத்தையும், வெளிப்பாட்டையும், சரீர சுகத்தையும் கர்த்தர் அருள்வாராக என வாழ்த்துகிறேன்.

**– ஆமென்.**



## என்னுரை

என் இனிய வாசகர்களே! வல்லவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கடை சரக்கு போல் சத்தியம் மலிந்து போலிக் கலப்புகள் பெற்று சபையைக் கலக்கிக் கொண்டிருக்கிற இந்த வேளையில் சத்தியமாவது என்ன? என்ற தலைப்பில் திருமறை விளக்கங்களை எழுத ஆவியானவர் என்னை நடத்தினார்.

கண்மூடித்தனமாகவோ அல்லது பாரம்பரிய பழக்கத்தின் படியோ நான் ஒட்டி அல்லது வெட்டி எழுதாமல் சத்திய வேதம் சொல்லும் உண்மைக் கருத்தை நடுநிலையில் சமநிலையில் நின்று எழுதியிருக்கிறேன்.

அநேகக் காரியங்களை விளக்க வேண்டும் என்ற வாஞ்சை எனக்கு இருந்தது. பக்கங்கள் என்னைக் கட்டுப்படுத்தினபடியால், இன்றைய கிறிஸ்தவ சபையில் பெரும் பிரச்சினைக்குள்ளாக்குகிற 5 தலைப்புகளை மாத்திரம் இதில் விளக்கி உள்ளேன்.

இது எந்த ஒரு குறிப்பிட்ட சபைப்பிரிவின் உபதேசம் அல்ல, பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டதும், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவைகளுமாய் இருக்கிறது.

ஒருமனதோடு வாசியுங்கள். வசனங்களை உடனுக்குடன் ஒப்பிட்டுப் பாருங்கள். கர்த்தர் உங்களை சரியான சத்தியத்திற்குள்ளாய் வழி நடத்துவாராக.

இவண்
உங்கள் அன்பன்,
**அ. கிறிஸ்டோபர்.**

## படைக்கிறேன்

நிழல் நிஜமாய்த் தன்னைக் காட்டுகிறது
சுழல் சுத்தரை சேற்றில் இழுக்கிறது
விழல் விளைச்சலை வேகம் பெருக்குகிறது
தழல் வீசும் வசனம் தள்ளாடுகிறது

போலிகள் இன்று பொன்னாய் மின்னுகிறது
வேலிகள் இங்கு பயிரை மேய்கிறது
கோலிகள் தங்களை உலகம் என்கிறது
ஏலிகள் சேனை சேவை மறுக்கிறது

சத்துவம் இன்றி சபை அழிகிறது
சத்தியம் தேடி அது அலைகிறது
சத்தியத் தேர்வில் ஜெயம் பெற்றிட
சத்தியமாவது என்ன எனும் நூலை
சத்திய ஆவியே படைக்கிறேன்.

**- ஏற்றிடுவீர்.**



## விழுதுகள்

**அத்தியாயம்**

1. சத்தியத்தை அறிவீர்கள்!
2. ஓய்வு நாள் ஆசரிப்பு உண்டா?
3. ஒரே ஞானஸ்நானம் எது?
4. ஏகத்துவமா? திரித்துவமா?
5. ஊழியருக்கு விவாகம் ஏற்றதா?
6. அந்நியபாஷை அவசியமா? ஆதாரமுண்டா?

# 1

# சத்தியத்தை அறிவீர்கள்

அன்பு வாசகர்களே! அன்பரின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிருபையும் நன்மையும் உங்களைத் தொடர்வதாக என வாழ்த்துக்கிறேன். எனது பதினாறவது தமிழ்ப் படைப்பை உங்களுக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

என் வாசகர்கள் (பிள்ளைகள்) சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை. (III யோவான் 4)

வெகு சீக்கிரத்தில் ஒரு மிகப்பெரிய காரியத்தை நாம் சந்திக்கப் போகிறோம். அது நமது இரட்சகரின் மகிமையான இரண்டாவது வருகை. நம்மில் பலர் அதற்காகத்தான் வாஞ்சையோடு பிரயாசப்படுகிறோம். அந்த வருகையில் அவரை சந்திக்கத் தவறியவர்கள் அடுத்து அவரை நியாயாதிபதியாக சந்திப்பார்கள்.

கர்த்தரின் வருகை கர்த்தரின் நியாயத் தீர்ப்பு இந்த இரண்டில் ஒன்றை மனுக்குலம் நிச்சயம் சந்தித்தே ஆக வேண்டும். இந்த இரண்டின் போதும் முக்கியப்படுத்துவது எது தெரியுமா? முன் நிற்கப்போவது எது தெரியுமா? சத்தியம் என்கிற அளவுகோலே.

**சத்தியத்தைக் கைக் கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள். ஏசாயா 26 : 2**

**..... அவர் ஜனங்களை சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் சங்கீதம் 96 : 13.**

என்ற இரண்டு வசனங்களில் நான் மேற்கூறிய கருத்து உண்மை என்று விளங்குகிறதல்லவா. யோவான் 18 : 38 இல்



இயேசுவிடம் பிலாத்து கேட்ட கேள்வியைப் பாருங்கள்.

**சத்தியமாவது என்ன?** இது தான் கேள்வி. ஆனால் கேள்வியைக் கேட்ட அவன் இயேசுவிடமிருந்து பதிலைப் பெற்றுக் கொள்ளவில்லை.

கேள்வி கேட்கும் அளவிற்கு ஆர்வம் இருந்த அவனுக்கு பதிலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பு இல்லாமல் போனது மிகுந்த வருத்தமான காரியமே. கேள்வியைக் கேட்டு விட்டு சற்றும் தாமதியாமல் அவன் தனது வார்த்தைகளையும் கேள்விகளையும் மக்கள் முன்பு வைக்கத் துவங்கி விட்டான்.

இன்றும் பலர் கிறிஸ்தவத்திற்குள் இப்படித்தான் இருக்கிறார்கள். ஒரு காரியத்தைக் குறித்து கேள்விப் படுகிறார்கள். அதைக் குறித்து மேலும் அறிய கேள்விகள் கூட கேட்கிறார்கள். ஆனால் பதிலுக்குத் தான் காத்திருப்பதில்லை; ஆர்வமும் காட்டுவதில்லை. அவர்களை ஒருவித மயக்கம் ஆண்டு கொண்டு விடுவதால் சரியான முறையில் சத்தியத்தை அறிந்து கொள்ள புரிந்து கொள்ள அவர்களால் முடிவதில்லை.

**சத்தியம்** என்கிற குறிப்பிட்ட வார்த்தைக்கு சரியான விளக்கம் என்ன என்கிற கேள்வி உங்களுக்கே கூட எழலாம். சத்தியம் என்கிற தமிழ் வார்த்தைக்கு உண்மை என்கிற நேரடி பொருள் இருந்தாலும் வேதம் சத்தியம் என்று எதைக் கூறுகிறது என்பதைச் சரியாய் உணர்ந்திடல் வேண்டும். கிழே உள்ள இரண்டு வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

**உம்முடைய வேதம் சத்தியம் சங்கீதம் 119 : 142**

**உம்முடைய வசனமே சத்தியம் யோவான் 17 : 17**

இப்பொழுது புரிகிறதா! கர்த்தர் நமக்குத் தந்தருளிய மகத்துவமான வேதமே சத்தியம் என்பது. கிறிஸ்துவுக்குள் பிறப்பவர்கள் ஜீவ அப்பமாகிய வேதவசனத்தைப் புசித்து வளராததால் சிசு மரணமடைந்து கிறிஸ்துவை விட்டே விலகிப் போய் விடுகின்றனர்.

வேத வசனத்தைக் குறித்து வேதமே என்ன சொல்லுகிறது

என்பதைக் கவனியுங்கள்.

- ★ சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை **விடுதலை யாக்கும்** யோவான் 8 : 32
- ★ உமது சத்தியத்தினால் அவர்களைப் **பரிசுத்தமாக்கும்.** யோவான் 17 : 17
- ★ சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அறையில் கட்டினவர்களாய்... **நில்லுங்கள்** எபேசியர் 6 : 14

ஒரு மனிதனை விடுதலையாக்குவதும் பரிசுத்தமாக்குவதும் ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயம் பெற நிற்க வைப்பதும் சத்தியம் மாத்திரமே.

திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான். வேத வசனத்தைக் கனம்பண்ணுகிறவனோ ஆசீர் பெறுவான். கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்குத் தக்க பூரண வளர்ச்சிக்கு நம்மை நடத்துவது வேத வசனம் மாத்திரமே.

பிரியமானவர்களே சற்று யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு ஆயிரம் கிருபைகள் இருக்கலாம். பலர் பாராட்டும் வண்ணம் தாலந்துகள் இருக்கலாம். ஏன்! ஒருவேளை நீங்கள் ஊழியம் கூடச் செய்யலாம். ஆனால் வேத வசனத்தின்படி உங்கள் வாழ்வு இருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள்.

நம்மை அளக்கப் பயன்படுத்தும் அளவுகோல் நமது ஊழியமல்ல. நமது அந்தஸ்துமல்ல. அந்த அளவுகோல் தேவன் தந்த வேதமே. எனவே தாம் இன்றைக்குக் கர்த்தர் நமக்கு சத்தியத்தை வெளிப்படுத்தி சத்தியப்பாதையில் நடத்துகிறார்.

பரிசுத்த ஆவியானவர் பூமிக்கு வந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அவர் நமக்கு வேத வசனத்தை விளக்கிப் போதித்து, அதில் நடத்துகிறார் என்பதே முக்கியமானதும் சிறப்பானதுமான அம்சம்.

யோவான் 16 : 13இல் அவர் வரும்போது **சகல சத்தியத்திற்குள்ளும்** உங்களை நடத்துவார், என்றல்லவா எழுதப்பட்டிருக்கிறது. அன்பு வாசகரே சத்தியத்தில் நடப்பது வேறு.



**சகல** சத்தியத்தில் நடப்பது வேறு.

வேத வசனத்தின் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு வாழ்வது முக்கியமல்ல. வேத வசனத்தை முழுவதுமாக அது விளம்பப்பட்ட விளக்கப்பட்ட விதத்திலேயே நமது வாழ்வில் கடைபிடிப்பதே சகல சத்தியத்தில் நடப்பதாகும்.

இப்பொழுது சொல்லுங்கள். நீங்கள் சத்தியத்தில் நடக்கிறீர்களா? அல்லது சகல சத்தியத்தில் நடக்கிறீர்களா? இந்தப் பிரபஞ்சத்தின் அதிபதி நமது இலக்கை அடைய விடாமல் நம்மைத் தடுப்பதற்கு பல்வேறு வித்தைகளை செய்து விஷ வித்தை விதைத்து வருகிறான். ஜாக்கிரதை.

வேத வசனத்தை விகற்பமாய்ப் போதிக்கும் வித்தகர்களின் விளைச்சல் பூமியில் கூடி வருகிறது. கவனமாயிருங்கள். மின்னுவதெல்லாம் பொன்னல்ல. அதுபோல் எவர் பண்ணினாலும் அது பிரசங்கமல்ல என்பதை சொல்ல விரும்புகிறேன்.

இயேசுவிடமே சாத்தான் மூன்று முறை வசனத்தையல்லவா மேற்கோள் காட்டினான். அங்கு இயேசு என்ன செய்தார் தெரியுமா? வேத வசனத்திலிருந்து சரியான பதிலைக் கொடுத்தார். வேதத்தின் மூலம் கர்த்தர் பேசுவார் என்பது மாத்திரமல்ல. சமயம் கிடைத்தால் சாத்தானும் வேதம் ஓதுவான் என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா.

கர்த்தருடைய ஆவியானவரே நம்மை சரியான சத்தியத்தில் நடத்துகிறார். எனவே பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்கும் வழிகாட்டுதலுக்கும் காத்திருங்கள்.

இந்த விகற்பமான வேலையை செய்வதற்கு சாத்தான் எழுப்பும் மனிதர்கள் சாதாரண நபர்களென்று எண்ணி விடாதீர்கள். வேதம் சொல்லுகிறபடி ஒளியின் தூதனின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு மிகப் பிரகாசமான தோற்றம் தந்து கையில் நாலு அற்புதங்களை வைத்துக் கொண்டு மிகத் தந்திரமாக வேதப் புரட்டை நமக்குத் தெரியாமலேயே நம்மை

நம்ப வைத்திடும் விதத்தில் லௌகிக ஞானத்தால் போதிக்கும் பல கர்த்தர்கள் அவன் கைவசம் ஏராளம் உண்டு.

கடைசிக் காலத்தில் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர் பிசாசுகளின் உபதேசத்திற்கும் செவி கொடுத்து.... I தீமோ 4 : 1. இங்கே **பிசாசுகளின் உபதேசம்** என்ற வார்த்தையைக் கவனியுங்கள்.

சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகுங் காலம் வரும் II தீமோ 4 : 4. இதில் **கட்டுக்கதை** என்ற வார்த்தையைக் கவனியுங்கள்.

சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கு செவிகொடாமல்.... நீ அவர்களைக் கண்டிப்பாய் கடிந்து கொள். இதில் **மனிதருடைய கற்பனை** என்ற வார்த்தையைக் கவனியுங்கள்.

அநேகரைப் போல் தேவ வசனத்தைக் கலப்பாய் பேசாமல் துப்புரவாயும் தேவனால் அருளப்பட்ட பிரகாரமாயும் கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம். (II கொரி 2 : 17) இதில் **வசனத்தைக் கலப்பாய்** என்ற வார்த்தையைக் கவனியுங்கள்.

ஆக பிசாசுகளின் உபதேசம், கட்டுக்கதை, மனித கற்பனை, கலப்படம் ஆகிய எதிர்ப்பின் ஆயுதங்களின் மத்தியிலே நமது சத்திய வார்த்தை அமைந்துள்ளது. இப்படி சத்திய வசனத்திற்கு எதிராக எழும்புகிற மக்கள் கூட்டம் ஒருபுறம் இருக்க மெய்பக்தர்கள் சத்தியத்தை விளக்கி உறுதிப்படுத்த வேண்டிய தங்கள் கடமைகளை கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவது பலரை மறுபுறம் இடறலுக்குள் ஆக்கி விடுகிறது.

இவர்கள் இப்படி செய்வதற்கு இரண்டு காரணம் உண்டு. எல்லா மக்களையும் தங்கள் கைவசம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது முதற்காரணம். சத்தியத்தை சொல்லி எந்த மனிதரையும், அவரது உலகப்பிரகாரமான உதவிகளையும் இழந்துவிடக்கூடாது என்பது இரண்டாவது காரணம்.

மரித்துப்போன நபரின் ஆத்துமா பாவமன்னிப்பைப் பெற்று எப்படியாகிலும் பரலோகம் வர வேண்டும் என்பதற்காக பக்திப்பரவசத்தில் மூழ்கி ஜெபித்த ஒரு ஊழியரை நன்கு அறிவேன். அப்படி செய்வது வேதவசனத்தின்படி சரி அல்ல என்றும், இயேசுகிறிஸ்துவின் போதனைகளுக்கு எதிரானது என்று தெளிவாகத் தெரிந்திருந்தும் அவர் ஜெபித்ததற்குக் காரணம்; மரித்தோரின் மகன்களால் தனது ஊழியத்திற்கு வரும் தொடர் வருவாய் நின்று விடக்கூடாது என்பதற்கே.



இன்றைய கிறிஸ்தவ உலகில் தரிசனம் கெட்டுப் போனது வேதனை அளிக்கக்கூடியது மாத்திரமல்ல. வெட்டித் திருத்த வேண்டிய ஒன்றாகும். சற்று வசனத்தை இலகுவாக்குவதன் மூலம் ஒரு பெரிய கூட்டத்தை தங்கள் பக்கம் இழுக்க நினைக்கிறார்களே தவிர வேத வசனத்தை சுத்தமாய்ப் போதித்து இடுக்கமான வாசலாக இருந்தாலும் கொஞ்சம் பேரையாகிலும் நடத்தலாம் என்கிற எண்ணம் பலருக்கு இல்லவே இல்லை.

என் இலக்கிய ஊழியத்தை நேசிப்பவரும் இலக்கியப் பணியில் ஈடுபாடு உள்ளவருமான ஒரு பெரிய தேவனுடைய மனிதன் என்னோடு பேசும் போது அவர் சொன்ன வார்த்தை என்னை பெரிய அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. “பிரதர் உங்கள் எழுத்துக்களை அதிகம் பேர் விரும்புகிறார்கள், பலர் அதிகம் பாராட்டுகிறார்கள், அநாவசியமாக உங்கள் அபிமானிகளை இழந்து விடாதீர்கள். உபதேச விஷயங்களை அதிகமாக எழுதாதீர்கள். நீங்கள் வளர வேண்டியவர். வீணாக உங்கள் எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்ளாதீர்கள்” என்று அன்புடன் எச்சரித்தார்.

அப்படியானால் மக்கள் மகிழ்கிற வேதப்பகுதிகளையே தொட்டு எழுதுங்கள். அவர்களை உணர்வடையச் செய்கிற ஆழமான ஆவிக்குரிய இரகசியங்களை எழுதாதீர்கள் என்று தானே அர்த்தம். ஐயகோ! இப்படியும் ஒரு வாழ்வா?

இதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும் போது அவனவனுடைய வேலைப்பாடு அக்கினியினால்

சோதிக்கப்படும் என்று குறிப்பிடுகிறார். புல், மரம் வைக்கோல் வெந்து அழிந்து போகும். வெள்ளி கல் பொன் அக்கினிக்குத் தப்பி நன் மதிப்பைப் பெறும்.

இன்று பெரிதாயிருக்கும் சில வேலைப்பாடுகளை நம்பி ஏமாந்து போகாதீர்கள். சத்தியத்தை அறிந்து சத்துவம் பெற்று வாழ வாஞ்சியுங்கள். எந்த மனிதருக்காகவும் ஒரு காரியத்தை (வசனத்தில் இல்லாத) ஏற்றுக் கொள்ளாதீர்கள். (வசனத்தில் உள்ளதை) ஏற்றுக் கொள்ளாமலும் இருக்காதீர்கள்.

கர்த்தருடைய வசனமே நமது பாதைக்குத் தீபமும் வழிக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது. அவரது கற்பனைகள் நாம் படுத்துக் கொள்ளுகிற போது நம்மைக் காக்கிறது, நடக்கும் போது நம்முடன் சம்பாஷிக்கிறது. அதை உறுதியாய்ப் பற்றிக் கொள்வோம்.

கட்டுக் கதைகளும் மனித கற்பனைகளும் உங்களை எந்த விகிதத்திலும் வஞ்சித்து விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள். யார் எதை எப்படி சொன்னாலும் 'எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். (வசனத்துக்கு எதிராக) பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விடுங்கள்.' I தெச 5 : 21,22

வேத வசனத்தை நித்திரை மயக்கத்தில் வாசிக்கிற சிலர் தங்களுக்கே உரித்தான மதியீனமான முறையிலும் மாம்சீகத்திலும் வியாக்கியானம் செய்து வேத வசனத்தில் மந்தபுத்தியுள்ளவர்களை மயக்கி விடுகின்றனர். மிகுந்த கவனம் தேவை.

என்னுடைய சபையில் ஒரு வாலிபத் தம்பி இருந்தார். அவர் திடீரென்று சபைக்கு வருவதை நிறுத்தி விட்டார். சில மாதங்களுக்குப் பிறகு அவரை ஒரு நாள் வழியில் சந்தித்தேன். சபைக்கு ஏன் வரவில்லை என்று விசாரித்தேன். அதற்கு அவர் தான் வேறு சபைக்குப் போவதாகச் சொன்னதுமன்றி, 'உங்கள் போதனை மற்றும் ஊழிய ஒழுங்கு சரியில்லை எனவே வேறு



சபைக்குப் போகிறேன்' என்றார்.

எனக்கு மிகுந்த ஆச்சரியம் எது சரியில்லை என்று எனக்கும் சொன்னால் நானும் திருந்த திருத்திக் கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று அவரைக் கேட்டேன்.

அவர் சொன்னார், 'நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள் மணவாட்டி உடன்படிக்கையில் என்னை சேர்க்க கையெழுத்தும் வாங்கவில்லை இப்பொழுது நான் போகிற சபையில் மணவாட்டி உடன்படிக்கைக் கையெழுத்துப் போட்டுவிட்டேன்' என்று புலம்பியது மாத்திரமல்ல, கீழே கண்ட வசனத்தை மேற்கோள் காட்டினார்.

**.... ஒருவன் நான் கர்த்தருடையவன் என்று கையெழுத்துப் போட்டு இஸ்ரவேலின் நாமத்தைத் தரித்துக் கொள்வான். ஏசாயா 44 : 5.**

அத்தோடு விட்டாரா? "நமது கர்த்தர் யூதேயா சமாரியாவில் தான் வருவார். கொஞ்சக்கால ஆயத்தத்துக்குப் பிறகு யூதேயா சமாரியா நாடுகளில் எங்களுக்கென ஆயத்தமாக்கப்பட்ட இடத்திற்கு சென்று கர்த்தரின் வருகைக்காய் காத்திருப்போம்" என்றார்.

எனக்குத் தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது (உங்களுக்குந் தானே?) நான் எவ்வளவோ சொல்லியும் அவர் ஏற்கவில்லை. (தற்போது யூதேயா சமாரியா புரோகிராம் கேன்சல் என்று வழியில் பார்த்து சொன்னார். ஆனாலும் எங்கள் சபைக்கு வருவதில்லை)

பிரியமானவர்களே, தங்களுக்கு எது வசதியோ, மக்களைக் கவர எது வாய்ப்போ அதையே பிரசங்கித்து ஆத்துமாக்களை அழிக்கும் அபாயத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். வேதத்தின் எந்தப் பகுதியை எடுத்தாலும் அதில் தேவன் எதிர்பார்க்கும் காரியம் எதுவென்று ஆராய்ந்து அதன்படி செயல்பட வேண்டுமே தவிர முதன்மையானதை விட்டு விட்டு தேவையில்லாதவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது.

ஒரு சபையில் அப்பம் பிட்குதலுக்கு சிறிய வட்ட வடிவ அப்பங்களைப் பயன்படுத்தினார்கள். அதற்கு ஒரு போதகர் 'ஒரே சரீரம்' என்று வேதம் சொல்லியிருக்க, பல அப்பங்களை வைத்து பல கிறிஸ்துவைப் பிட்டு துரோகம் செய்கிறீர்களே என்றார்.

நான் அவரை அழைத்து உங்கள் வாதம் மிக பிரம்மாதம். ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம். உங்கள் சபையில் 500 பேர் பந்தியில் பங்கு பெறுவது என்ற நிலையில் நீங்கள் 500 பேருக்கும் ஒரே அப்பம் சுடுவீர்களா? என்றேன். அவர் "அதெப்படி 500 பேருக்கு ஒரே அப்பம் போதும் 5 அல்லது 10 அப்பம் சுடுவோம்" என்றார்.

ஓகோ! நீங்களும் 5 அல்லது 10 இயேசுவைத்தான் பிட்டு துரோகம் செய்கிறீர்களா? என்றேன். ஆடிப்போனார் - அமைதலானார்.

இயேசுவின் மரணத்தை நினைவுகூரும்படி, அவரோடு ஐக்கியப்படும்படி அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவுகூரத்தான் அப்பமும் திராட்சை ரசமுமே தவிர வேறெந்த ஒன்றுக்கும் இவை ஏற்படுத்தப்படவில்லை, (இதைக் குறித்துத் தனியாக எழுதியிருக்கிறேன்).

ஒருமுறை ஒரு புத்தகக்கடையில் நின்று கொண்டிருந்தேன், அங்கே வந்த சகோதரர் ஒருவர் சிறிது நேரக் கலந்துரையாடலுக்குப் பிறகு நான் இன்னான் என்று தெரிந்து கொண்டவுடன் என்னைப் பார்த்து 'பூ வைப்பது தவறா?' என்று கேள்வி கேட்டார். எனக்கு எப்படி பதில் சொல்வது என்ற திகைப்பு. இது விவாதிக்கப்பட வேண்டிய காரியம். அதற்கு இந்த இடம் சரியில்லை. நீங்கள் உங்கள் போதகரையே கேளுங்கள். அவர் சொல்வது வேத வசனத்தின்படி சரியாகத் தெரிய வந்தால் அப்படியே செய்யுங்கள் அல்லாத பட்சத்தில் உங்கள் விருப்பப்படி செய்யுங்கள் என்று முடித்தேன்.

அவர் விட்ட பாடில்லை. "இயேசு சாரோனின் ரோஜா அவர் பள்ளத்தாக்கின் லீலி, எனவே அவரின் அடையாளமாக ஏன் பூவை வைக்கக்கூடாது" என்று தர்க்கத்தில் இறங்கினார்.



"ஏங்க இயேசு தேவ ஆட்டுக்குட்டி எனவே, ஆட்டுக்குட்டியைத் தோளின் மேல் போட்டுக் கொண்டு உலா வருவீர்களா" என்று கேட்க உதடு துடித்தது, ஆகிலும் மிகுந்த சாந்தத்தோடு "இயேசு சாரோனின் ரோஜா தான் பெண்கள் மாத்திரம் தான் வைத்துக் கொள்ள வேண்டுமா? உங்கள் கண்டுபிடிப்பின்படி நீங்களும் கொஞ்சம் பூ வைத்துக் கொண்டால் மிக அழகாக இருக்குமே" என்றேன். நேரமாகி விட்டது போகிறேன் என்று போய் விட்டார்.

நகை, பூ, உடை இவைகளைக் குறித்து வேதம் போதிப்பது என்ன என்பதைக் குறித்து மிகுந்த திறந்த மனதுடன் பெந்தெகொஸ்தேகாரர்களின் கலப்பில்லாமல் வேறொரு புத்தகத்தில் தனியாக எழுதுகிறேன். இந்தப் புத்தகத்தில் இடமில்லை. (வெரி ஸாரி)

விசுவாசத்தால் வராத எல்லாம் பாவம் தான். நான் மேலே காண்பித்த உதாரணங்கள் எனக்கு வசதியான விதத்தில் உபதேசத்தை வளைக்க அல்ல, மனிதக் கற்பனைகள் எப்படி லாவகமாகச் சுழல்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்கே.

எனக்கன்பானவர்களே இந்த நூலில் சில முக்கியமான காரியங்களில் கிறிஸ்தவ உலகத்தில் நிலவி வரும் ஸ்திரமற்ற கொள்கைகளை சரியான வசன ஆதாரங்களோடு உங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க விரும்புகிறேன்.

இவைகளை நீங்கள் வாசித்து, வேத வசனத்தின்படி ஒப்பிட்டு, ஜெபத்தில் வைத்து, பரிசுத்த ஆவியானவரின் உதவியால் வசனத்தின்படி வாழ ஒப்புக் கொடுங்கள். மகிமையின் தேவன் உங்களை தமது வசனத்தின் வல்லமையால் இடைக்கட்டிக் காப்பாராக.

# 2

## ஓய்வுநாள் ஆசரிப்பு உண்டா?

அநேக வருடங்களுக்கு முன்பாக சென்னையில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு நல்ல தேவனுடைய மனிதர் இருந்தார். அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் கிருபையையும் பெற்றவர். ஏதோ ஒரு காரணத்திற்காகத் தனது ஊழிய ஸ்தலத்தை கோவைக்குப் பக்கத்திலுள்ள ஒரு இடத்திற்கு மாற்றிவிட்டார்.

பல வருடங்களுக்கு முன்பாக அவரது தலைமை சபையில் நடைபெற்ற கன்வென்ஷனுக்கு, அழைக்கப்பட்ட போதகருடன் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அங்கு சென்ற பிறகு எங்களுக்கு ஒரு ஆச்சரியம். அவர் சபைகூடி வருதலை சனிக்கிழமை ஓய்வுநாள் ஆசரிப்பாக மாற்றியிருந்தார்.

ஏன் இந்தநிலை என்று விசாரித்தற்கு அவர் வெளிநாடு சென்றிருந்த போது அங்கே சனிக்கிழமை ஓய்வுநாள் ஆசரிப்பு தான் சரி என்று போதிக்கப்பட்டாராம். எனவே சபையின் ஆசரிப்பை சனிக்கிழமைக்கு மாற்றிவிட்டாராம்.

பாருங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம், கிருபை பெற்ற தேவ மனிதர், எங்கோ எவரோ எதையோ போதித்ததைத்தான் பெற்ற அபிஷேகத்தின் மூலம் நிதானித்து அறியாமல் அடிமையாகி விட்டார்.

இந்த சம்பவத்தை நான் எழுதக் காரணம் உண்டு. 'ஏழாம் நாள் காரர்களின்' பரிசேயத்தனமான திட்டத்தில் உருவான இந்த ஓய்வுநாள் வியாதி படிப்படியாகப் பலரைப் பிடித்துக் கொண்டது.



மாத்திரமல்ல, எஞ்சியவர்களும் எதுசரி என்று சந்தேகப்பட்டுக் கலங்கும்படி செய்கிறதை சுட்டிக் காட்டும்படியே.

இந்த நாட்களில் அநேகக் கிறிஸ்தவர்களின் கலக்கமே இதுதான். ஒருவேளை ஏழாவது நாளாகிய சனிக்கிழமையில் ஆராதனை செய்யாமல் தேவ சித்தத்திற்கு விரோதமாக ஞாயிற்றுக்கிழமையில் ஆராதனை செய்து எங்கே பரலோகத்தை இழந்துவிடுவோமோ என்றும் நாம் இவ்வளவு பக்தியாக வாழ்ந்தும் ஏமாந்து போய்விடுவோமோ என்றும் எண்ணுவதை நினைத்தால் துக்கம்தான் மிஞ்சுகிறது.

எனவே ஓய்வு நாள் ஆசரிப்பு, புதிய ஏற்பாட்டு சபைக்கு உண்டா? நாம் ஞாயிறு சபைகூடி வருவது சரிதானா? என்ற கேள்விக்கு வேதவசன ஆதாரத்தோடு இந்த அதிகாரத்தில் விளக்கப் போகிறேன்.

விளக்கத்திற்கு நுழைவதற்கு முன்பாக இந்த ஏழாவது நாள் கொள்கை எப்படி வந்தது என்பதை சற்று நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

வில்லியம் மில்லர் என்பவரால் துவங்கப்பட்ட இவ்வியக்கம் கல்விப்பணியில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தது. தன்னுடைய வேத ஆராய்ச்சியின் கணக்கின்படி கி.பி. 1843 இல் இயேசு கிறிஸ்துவின் வருகை இருக்குமென்று கி.பி. 1831இல் அறிவித்தார். அவருடைய கூட்டத்தினர் ஆவலோடு காத்திருந்தனர். ஆனால் இயேசுதான் வரவில்லை.

மில்லரும் விடவில்லை. தனது கணக்கில் சிறிய தவறு நடந்துவிட்டதாகவும் 1844 இல் இயேசு கண்டிப்பாக வந்து விடுவார் என்றும் மறு அறிவிப்பு செய்தார். அப்பொழுதும் இயேசு வரவில்லை. அதன்பின் அவரது வேதக்கணக்கைக் குறித்தும் ஆண்டவர் வருகையைக் குறித்தும் அவர் சொன்ன வியாக்கியானங்கள் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. அவரது

கணக்கே முடிந்துவிட்டது.

அவருக்குப் பிறகு அந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை திரு. ஒயிட் என்பவரும், அவரது துணைவியார் திருமதி ஹெலன் G. ஒயிட் என்பவரும் கைப்பற்றினர். ஹெலன் G. ஒயிட் அம்மையாரின் தரிசனத்தில் பத்துக் கற்பனையில் நான்காவது கற்பனையின் மேல் தேவ ஒளி வீசுவதைத் தான் பார்த்ததாகவும் எனவே ஓய்வுநாள் ஆசரிப்பு மிக அவசியம் என்றும் அவர் அறிக்கை வெளியிட்டார்.

இந்த அம்மையாரே ஏழாம்நாள் இயக்கத்தின் தாய், தீர்க்கதரிசினி, இவரின் தீர்க்கதரிசன தொகுப்புக்கு வேத புத்தகத்தைவிட அதிக முக்கியத்துவம் ஏழாம் நாள்காரர்களால் கொடுக்கப்பட்டு வருகிறது.

**கவனியுங்கள் தப்புக்கணக்கு போட்டமில்லர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டதும், ஹெலன் ஒயிட் அம்மையாரின் வெளிப்பாடுகளின் அடிப்படையில் (வேத வசனத்தின்படி அல்ல) வளர்க்கப்பட்டதும் தான் ஏழாம் நாள் இயக்கம்.**

தற்போது ஆய்வுக்கு வருவோம். புதிய ஏற்பாட்டு சபைக்கு ஓய்வுநாள் ஆசரிப்பு தேவைதானா தேவைதானா என்ற கேள்விக்கு **தேவையில்லை** என்று ஒரே வரியில் பதில் தந்து விட்டு அதற்கான விளக்கத்தைத் தொடர விரும்புகிறேன்.

1. ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது பத்துக் கற்பனைகளில் ஒன்று. எனவே நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு ஓய்ந்திருக்கும்படி எந்த மனிதருக்கும் கட்டளை கொடுக்கப்படவில்லை.

ஆதியாகமம் 2 : 2,3 வசனங்களில் ஏழாம் நாளில் தேவன் ஓய்ந்திருந்தார் என்று எழுதியிருக்கிறதே தவிர ஆறாம் நாளில் உருவாக்கப்பட்டவனும் ஏழாம் நாளில் உயிரோடு இருந்தவனுமாகிய ஆதாம் ஓய்ந்திருந்தான் என்று வேதத்தில்



எழுதப்படவில்லை.

மாத்திரமா, ஆபேல் ஏனோக்கு நோவா ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு போன்ற பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஓய்ந்திருந்ததாக எந்தக் குறிப்பையும் வேதத்தில் உங்களால் காண முடியாது. காண்பிக்கவும் முடியாது.

2. இது முழுக்க முழுக்க எகிப்திலிருந்து விடுதலை பெற்ற இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூரும்படி தேவனால் உண்டாக்கப்பட்ட திட்டம் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

நீ எகிப்து தேசத்தில் அடிமையாய் இருந்தாய் என்றும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார் என்றும் நினைப்பாயாக. **ஆகையால்** ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் **உனக்குக் கட்டளையிட்டார்.** உபாகமம் 5 : 15.

கவனியுங்கள் ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதை நினைவு கூறும்படிக்கே கொடுக்கப்பட்டது தவிர கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டதல்ல.

3. ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது பத்துக் கற்பனையில் நான்காவது கற்பனை. நாம் நியாயப் பிரமாணத்தின்படி அழைக்கப்படாமல் கிருபையின் பிரமாணத்தின்படி இயேசு கிறிஸ்துவால் அழைக்கப்பட்டிருக்கிறோம். நமது இரட்சகராகிய கிறிஸ்து இயேசு நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றி முடித்து விட்டார்.

இன்னும் சொல்லப் போவோமானால் அவர் மரணத்தினால் நியாயப் பிரமாணத்தின் அதிகாரத்தை உரிந்து விட்டார். இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பிறகு நியாயப் பிரமாணத்திற்கு வேலை கிடையாது. தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள

வேத வசனங்களை வாசித்துப் பார்த்தால் நியாயப் பிரமாண ஆளுகை நம்மை விட்டுக் கிறிஸ்துவால் நீக்கப்பட்டு விட்டதைத் தெளிவாய் உணர்ந்து கொள்வீர்கள்.

★ ... நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்(து)தார். எபேசியர் 2 : 15.

★ விசுவாசம் வருவதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக அடைக்கப்பட்டவர்களாய் நியாயப் பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். விசுவாசம் வந்த பின்பு (நியாயப் பிரமாணத்திற்கு) உபாத்திக்குக் கீழானவர்கள் அல்லவே. கலாத்தியர் 3 : 23,25

★ நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். கலாத்தியர் 5 : 4.

★ நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவில் இராதபடி எடுத்து சிலுவையின் மேல் ஆணி அடித்து வெற்றி சிறந்தார். கொலோசெயர் 2 : 14,15

4. பத்துக் கற்பனைகளை நன்றாகக் கவனித்துப் பாருங்கள். அவைகள் புதிய ஏற்பாட்டில் ஆவியானவரால் சபைக்குத் தேவை என்று ஆலோசனையாய்க் கொடுக்கப்படுகிறது. மிகக்கருத்தாக பத்துக் கற்பனைகளைப் புதிய ஏற்பாட்டில் தேடிப்பார்த்தால் ஆச்சரியமான ஒரு காரியத்தை காண்பீர்கள். பத்தில் ஒன்பது கற்பனைகளை உறுதி செய்யும் வசனக்குறிப்புகள் பலவற்றை உங்களால் காண முடியும். ஆனால் நான்காவது கற்பனையாகிய ஓய்வு நாளை வலியுறுத்துகின்ற எந்த வசனக்குறிப்பையும் நீங்கள் காண முடியாது. தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைக் கவனித்தால் உங்களுக்குத் தெளிவாக புரியும்.

மேற்கூறிய நான்கு மேற்கோள்களிலிருந்து ஓய்வுநாள் ஆசரிப்பு என்பது இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட



பின்பு அவர்களுக்கு மட்டும் உடன்படிக்கையாய் அருளப்பட்ட ஒன்று. என்பதைத் தெளிவாய் உறுதி செய்திருப்பீர்கள்.

ஒரு குறிப்பிட்ட ஜனத்திற்கு அருளப்பட்ட இந்த ஓய்வுநாள் ஆசரிப்பு முழு உலகத்திலும் ஒரே சமயத்தில் ஆசரிக்க வேண்டும் என்பது பூகோள, சமுதாய அடிப்படையில் செய்யமுடியாத ஒன்று. இந்த பாரத்தை தேவன் நம்மேல் சுமத்த அவர் ஒன்றும் ஏழாம் நாள்காரரல்ல என்பதை நினைவில் வையுங்கள்.

ஓய்வு நாள் என்பது வெள்ளிக்கிழமை மாலை சூரிய அஸ்தமனத்தில் துவங்கி சனிக்கிழமை மாலை சூரிய அஸ்தமம் வரைக் கடைபிடிக்க வேண்டியது பிரமாணம். சற்று யோசித்துப் பாருங்கள். நார்வே உட்பட துருவப் பிரதேசம் வரைத் தொடர்ச்சியாக பதினைந்து நாட்கள் முதல் மூன்று மாதம் வரை பகலாக கோடைக் காலத்திலும் தொடர்ந்து இரவாகக் குளிர்காலத்திலும் இருக்கும். அப்படியானால் இரண்டு அஸ்தமனத்திற்கு இடைப்பட்ட காலம் பல நாட்கள் பல மாதங்கள் இருக்கும் போது எப்படி ஓய்வுகளைக் கடைப்பிடிக்க முடியும்.

இந்த சிக்கலைத் தீர்க்க ஏழாம் நாள் காரர்களின் சிறப்புக் குழு அஸ்தமனத்திற்குப் பதிலாக வெள்ளி மாலை ஆறுமணி முதல் சனி மாலை ஆறு மணி வரை கடிகரம் வழக்கில் ஆசரிக்க தீர்மானித்துள்ளது. இருப்பினும் இது வசன அடிப்படையை இழந்த ஒன்று தானே.

இன்னும் கொஞ்சம் நமது பூகோள அமைப்பை சரியாகப் பாருங்கள். அமெரிக்காவில் இரவாக இருக்கும் போது நமக்குப் பகலாக இருக்கும்.

கிரீன்விச் ரேகையை மையமாகக் கொண்டு உலக வழக்கிலுள்ள கால முறைமையின்படி அமெரிக்காவில் சனிக்கிழமை மாலையாக இருக்கும் போது ஆஸ்திரேலியாவில் வெள்ளிக்கிழமை மாலையாக இருக்கும். அதாவது

| பழைய ஏற்பாட்டில் பத்துக் கற்பனைகள் | புதிய ஏற்பாட்டில் பத்துக் கட்டளைகள் |
|---|---|
| 1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். யாத் 20 : 3. | வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளில் உள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம். அப். 14 : 15. |
| 2. யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். யாத் 20 : 14. | பிள்ளைகளே நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக் கொள்வீர்களாக. I யோவா 5 : 21, I கொரி 8 : 13 |
| 3. என் நாமத்தை வீணில் வழங்காது இருப்பாயாக. யாத். 20 : 7 | வானத்தின் பேரிலாவது, பூமியின் பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம் பண்ணாதிருங்கள். யாக் 5 : 12. |
| 4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக. யாத். 20 : 8 | புதிய ஏற்பாட்டில் எங்கும் இல்லை |
| 5. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. யாத் 20 : 12 | பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் இது நியாயம். எபேசி 6 : 1 |
| 6. கொலை செய்யா திருப்பாயாக. யாத் 20 : 14 | கொலை செய்யாதிருப்பாயாக ரோமர் 13 : 9 |



| | |
|---|---|
| 7. விபசாரம் செய்யா திருப்பாயாக. யாத் 20 : 14 | விபசாரக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. I கொரி 6 : 9,10 |
| 8. களவு செய்யாதிருப்பாயாக. யாத் 20 : 15 | திருடுகிறவன் இனித் திருடாமல் – தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக் கடவன் எபே. 4 : 28 |
| 9. பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக. யாத் 20 : 16 | ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் கொலோ 3 : 9 |
| 10. இச்சியாதிருப்பாயாக. யாத் 20 : 17 | பரிசுத்தவான்களுக்கு எற்ற படி – அசுத்தமும் பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப் படவும் கூடாது. எபே. 5 : 3 |

அமெரிக்காவில் ஓய்வுநாள் முடியும் போது அதே நேரத்தில் ஆஸ்திரேலியாவில் ஓய்வுநாள் ஆரம்பிக்கும் இதில் எது சரி என்று யார் சொல்வது?

இதைப் போலேவே அரசியல் அமைப்பின் நிமித்தம் ஏற்பட்ட குழப்பங்களை மேற்கோள் காட்ட முடியும். கி.பி. 1867க்கு முன்பு அலாஸ்கா பகுதி ரஷ்யாவுடன் சேர்ந்து இருந்தது. அதற்குப் பின்னர் அது அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குள் வந்த போது அமெரிக்காவில் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கக் காலத்தை ஒட்டி சனிக்கிழமையாகக் கணக்கிடப்பட்டது. இப்படியிருக்க அலாஸ்காவில் எது ஏழாவது நாள்?

இன்னும் சொல்லப் போனால் ஏழாம்நாள் காரர்கள் ஆசரிக்கிற சனிக்கிழமை உண்மையிலேயே சிருஷ்டிப்பின்

போது இருந்த ஏழாம் நாளா என்பதே கேள்விக்குறி. காரணம் யோசுவாவின் நாட்களில் (யோசுவா 10 12, 14) யோசுவாவின் வார்த்தைப்படியே சூரியன் அஸ்தமிக்காமல் ஒரு பகல் முழுவதும் நடு வானத்தில் நின்றபடியால் நாள்கணக்கு மாறிவிட்டது என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆரம்ப சிருஷ்டிப்பின் ஏழு நாட்களுக்கும் யோசுவா காலத்தில் பின் வந்த ஏழுநாட்களுக்கும் இடையே ஏற்பட்ட வித்தியாசத்தை அட்டவணைப்படுத்துகிறேன். கவனியுங்கள்.




**யோசுவாவின் காலத்தில் மாற்றம்**

இந்த அட்டவணையின்படி பார்த்தால் சிருஷ்டிப்பின் ஏழாவது நாள் யோசுவா காலத்திற்குப் பிறகு ஞாயிற்றுக் கிழமையில் ஒன்றுபட்டு விட்டதை நன்றாக அறிய முடியும்.

எனவே ஏழாவது நாள் எதுவென்று பிரிப்பதும் அதை உலகரீதியாக ஆசாரிப்பதும் கூடாத காரியம். அப்படி செய்வதாகச் சொல்வது சுத்த ஏமாற்றுக் காரியம்.

இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் ஓய்வு நாளின் போது ஜெப ஆலயத்திற்குப் போனார்கள். இதைக் குறித்த தெளிவு நமக்கு வேண்டும். இயேசு கிறிஸ்து ஜெப ஆலயத்திற்குச் சென்றதற்கு இரண்டு முக்கிய காரணம் உண்டு. அவர் யூத குடும்பத்தில் பிறந்தவர். யூத முறைமையின்படி விருத்தசேதனம் செய்யப்பட்டார் வளர்க்கப்பட்டார். அந்த முறைமையின்படி தான் அவர் பஸ்காவைத் தவறாமல் புசித்தார். இது அவர் ஜெப ஆலயத்திற்குச் சென்றதற்கு முதலாவது காரணம்.



அதிகமான யூதர்கள் கூடுகிற இடத்தில் அவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அந்த நாளைத் தெரிந்து கொண்டார். இது இரண்டாவது காரணம்.

ஓய்வுநாளில் யூதர்களுக்குப் போதனை செய்யச் சென்றார் என்பதுதான் முக்கியம். அவர் ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை என்பதற்கு யூதர்களே சாட்சி. ஓய்வுநாளில் குருடன் ஒருவனுக்கு இயேசு பார்வை கொடுத்தார். இதைக் கண்ட பரிசேயர் 'அந்த மனுஷன் ஓய்வுநாளைக் **கைக்கொள்ளாத தினால்** அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். (யோவான் 9 : 16) என்று எழுதப்பட்டுள்ளது.'

அவர் **ஓய்வுநாளில்** சூம்பின கையுடைய ஒருவனை **சொஸ்தமாக்கினார்** (மத்தேயு 12 : 10) பதினெட்டு வருஷமாகக் கூனியாக இருந்தவளை **ஓய்வுநாளில் குணமாக்கினார்.** (லூக்கா 13 : 14) நீர்க்கோவை உள்ள மனிதனை **ஓய்வுநாளில் குணமாக்கினார்.** (லூக்கா 14 : 3) முப்பத்தெட்டு வருடமாய்ப் படுக்கையிலிருந்தவனை **ஓய்வுநாளில் தான் குணமாக்கினார்.** (யோவான் 5 : 16)

இந்த ஐந்து முறையும் அவர் ஓய்வுநாளைக் கடைபிடிக்க வில்லை என்று நியாயசாஸ்திரிகளாலும் பரிசேயராலும் கடிந்து கொள்ளப்பட்டார். இயேசுவும் ஓய்வுநாளை நீங்கள் ஆசரியுங்கள் என்று போதியாமல், ஓய்வு நாளில் ஆசாரியர்கள் ஓய்ந்திராமல் ஆலயத்தில் அந்த நாளை வேலை நாளாக்கினாலும் அவர்கள் குற்றமில்லாதிருக்கிறார்கள் என்றும் (மத்தேயு 12 : 5) பிரசங்கித்தார்.

அப்போஸ்தலர்கள் ஜெப ஆலயங்களுக்கு சென்றதற்கும் இதே காரணம் தான். ஓய்வுநாளில் யூதர்கள் திரளாய் ஜெப ஆலயங்களுக்குக் கூடி வருவார்கள். அங்கே தோற்சுருட்களி லுள்ள வேத பகுதியை வாசித்து விளக்கம் கொடுக்கும் வழக்கம் உண்டு. இந்த சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்குக் கிறிஸ்துவை பிரசங்கிக்கவே அப்போஸ்தலர்கள்

ஜெப ஆலயங்களுக்கு ஓய்வுநாளில் சென்றார்கள்.

இப்போதும் சில ஊழியர்கள் திருநீர்மலை, திருவண்ணாமலை, பழனிமலை என்று வருடந்தோறும் போகிறார்கள். விக்கிரகத்தை வணங்க அல்ல. அன்று கூடி வரும் இலட்சோப இலட்ச மக்களுக்கு கைப்பிரதிகள் வழங்கி கிறிஸ்துவை அறிவிக்கவே செல்கிறார்கள். அதைப் போல் அந்நாட்களில் அப்போஸ்தலர் ஜெப ஆலயங்களுக்குச் சென்றார்கள்.

அதைப் போலவே யாத்திராகமம் 31 : 16 ஐ மேற்கோள் காட்டி ஓய்வுநாள் மாறவில்லை. அது நித்திய உடன்படிக்கை என்று ஏழாவது நாள் காரர்கள் சொல்லும் கூற்றும் ஒத்து வராத ஒன்று. ஓய்வுநாள் மாத்திரமல்ல. விருத்த சேதனம் (ஆதி 17 : 7,13) ஆரோனின் ஆசாரிய ஊழியம் (யாத் 20 : 15) போஜன பலி (எசேக் 46 : 14) தீட்டுக்கழிக்கும் ஜலம் (எண்ணாக 19 : 21,22) போன்றவைகளும் நித்திய உடன்படிக்கையென்றே வேதம் சொல்கிறது. மற்றவைகள் எப்படி கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின் மாற்றப்பட்டதோ அப்படியே ஓய்வுநாளும் மாற்றப்பட்டது. பவுல் சொல்லுகிறபடி ஓய்வுநாள் எழுத்தின்படி இல்லாமல் கிறிஸ்துவினால் வரும் இளைப்பாறுதலுக்கு அது நிழலாய் இருந்தது இருக்கிறது.

**ஞாயிறு ஆராதனை :**

நாம் (திருச்சபை) கூடி வருவது ஓய்வுநாள் ஆசரிப்பு இல்லை. சபைகூடி வருதல் என்பதைத் தெளிவாய் உணர்தல் அவசியம். **சனிக்கிழமை ஓய்வுநாள் ஞாயிற்றுக் கிழமைக்கு மாற்றப்படவில்லை.** ஓய்வுநாள் ஒழிந்து போயிற்று, சபைகூடி வருதலை சபை ஆசரிக்கிறது.

நாம் ஏன் ஞாயிறு அன்று ஆராதிக்கிறோம் என்பதைக் குறித்த தெளிவான வசன அறிவு நமக்கு இருக்க வேண்டும். 7ஆம் நாள்காரர் சொல்கிறபடி ஞாயிறு (சூரியன்) அன்று சூரியனை ஆராதிப்பது அல்ல. வாரத்தின் முதல் நாளாகிய



ஞாயிற்றுக்கிழமையை தேவன் முக்கியப்படுத்தியிருப்பதையும் ஆதிசபை முக்கியப்படுத்தி இருப்பதை கவனித்துப் பாருங்கள்.

- ★ நமது இரட்சகராகிய கிறிஸ்து இயேசு வாரத்தின் முதல் நாளில் உயிரோடு **எழுந்தார்.**
- ★ உயிர்த்தெழுந்த இயேசு மீண்டும் 8 ஆம்நாள் (ஞாயிறு) சீஷர்களுக்குத் தரிசனமானார்.
- ★ பெந்தெகொஸ்தே (ஞாயிறு) நாளில் பரிசுத்த ஆவியானவர் **இறங்கினார்.**
- ★ ஞாயிறு அன்றுதான் (பெந்தெகொஸ்தே நாள்) முதல் சபை உருவாயிற்று. 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றனர்.
- ★ அதே நாளில் தான் முதன்முறையாக சுவிசேஷப் பிரசங்கம் செய்தனர்.

**ஆதிசபை வாரத்தின் முதல்நாளை முக்கியப்படுத்தியது.**

★ வாரத்தின் முதல்நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில் அப். 20 : 7.

★ ..... நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் **வாரத்தின் முதல்நாள்** தோறும் தன் திராணிக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக்கடவன்.

★ கர்த்தருடைய நாளில் (ஞாயிறு) யோவான் ஆவிக்குள்ளான போது வெளிப்படுத்தல் அருளப்பட்டது.

எனக்கன்பானவர்களே புதிய ஏற்பாட்டு சபைக்கு வாரத்தின் கடைசி நாளையல்ல. முதல் நாளை தேவன் ஆசரிப்புக்குக் கொடுத்து இருக்கிறார். எனவே ஒழிந்து போன ஏழாவது நாளைப் பிடித்துக் கொண்டு அல்லது அதன் நிமித்தம் அலசடிப்பட்டு உங்கள் ஆத்துமாவை நஷ்டப்படுத்திக் கொள்ளாமல் **வாரத்தின் முதல்நாளில் தேவனை ஆராதித்து தேவகிருபையில் பெருகுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

# 3

## ஒரே ஞானஸ்நானம் எது?

இன்றளவும் திருச்சபை மக்களிடையே பல்வேறு விமர்சனைகளுக்கு உள்ளான மற்றொரு காரியம் ஞானஸ்நானம் என்கிற காரியம்.

ஒருமுறை நான் ஓட்டிச் சென்ற வாகனம் திடீரென பழுதடைந்து ஓடாமல் நின்றுவிட்டது. அது ஒரு கிறிஸ்தவ ஆலயத்தின் வாசல். அப்போது அங்கு வேதபாடம் நடந்து கொண்டிருந்தது. நான் எனது வண்டியை பழுது பார்த்துக் கொண்டே அந்த வேத பாடத்தைக் கேட்கும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது. ஆனால் அங்கு கூறிய அறிவுரைகள் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

ஞானஸ்நானம் என்பது திருச்சபையின் ஒழுங்கே தவிர இரட்சிப்புக்கும் ஞானஸ்நானத்திற்கும் எந்த சம்பந்தம் கிடையாது. அது முக்கியமே தவிர அதி அத்தியாவசியமான ஒன்று என்று நினைக்கக்கூடாது. .... இப்படிப் பல கருத்துக்கள் பொழிந்தருளினார் அப்போதகர்.

எனக்கு வேர்த்து விறுவிறுத்து விட்டது. வண்டி சரியாகிவிட்ட படியால் நானும் புறப்பட்டுப் போய்விட்டேன். ஆனால் அந்த வேத(னை) பாட வாசகங்கள் என் உள்ளத்தில் இன்று வரை நெருடிக் கொண்டே இருக்கிறது.

இந்த **ஞானஸ்நானம்** என்கிற காரியம் எல்லா சபைப்பிரிவுகளிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும் அதில்தான் எத்தனை மாற்றங்கள் குழப்பங்கள் – கலப்புகள் தெரியுமா? ஞானஸ்நானம் பெற்ற நபர் நாம் எடுத்தது சரியா? என சந்தேகித்து மற்றொரு சபைப்பிரிவில் போய் ஞானஸ்நானம்



பெறுவதும் தவறான அடிப்படையில் ஞானஸ்நானம் பெறுவதும் தவறான அடிப்படையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 'ஒரே ஞானஸ்நானம்' என்ற வார்த்தையைப் பிடித்துக்கொண்டே தவறை அங்கீகரிப்பதும் எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்படுகிறது.

எனவே இந்த அத்தியாயத்தில்

ஞானஸ்நானம் அவசியமா?

ஞானஸ்நானம் யார் எடுக்க வேண்டும்?

எது வேதம் சொல்லும் ஞானஸ்நானம்?

என்ற கேள்விகளுக்கு திருமறைக்குள்ளே இருந்து தெளிவான விளக்கங்களை கலப்பில்லாமல் கசப்பில்லாமல் உங்களுக்கு அளிக்கப்போகிறேன்.

வேத புஸ்தகத்தைத் தெளிவாக வாசித்துப் பார்த்தால் இயேசுவின் பூலோக ஊழியத்தின் துவக்கத்திற்கும், முடிவிற்கும் இடையில் ஒரு குறிப்பிட்ட காரியத்தில் ஒரு முக்கிய இசைவை நீங்கள் காண முடியும்.

"அப்பொழுது யோவானால் **ஞானஸ்நானம் பெறுவதற்கு** இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்" மத்தேயு 3 : 13

"இயேசு சமீபத்தில் வந்து.... நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து .... உபதேசம் பண்ணுங்கள்" (மத்தேயு 28 : 18,20)

**இயேசு ஊழியத்தின் ஆரம்பத்தில் ஞானஸ்நானம் எடுத்தார் ஊழியத்தின் கடைசியில் ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டடையிட்டார்.** என்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று.

இந்த ஞானஸ்நானம் சபையின் சடங்காச்சாரமா அல்லது மனித கற்பனையா? என்பதற்கு முதற்கண் விடைகாணுதல்

அவசியம். இதைக்குறித்து வேதம் சொல்வதைப் பார்ப்போம். பிரியமானவர்களே! மீண்டும் ஒரு காரியத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்படி இருக்கும் அப்படி இருக்கக்கூடும் என்கிற யூகத்தின் அடிப்படையில் நான் எழுதாமல் வேதம் சொல்வதை அப்படியே உங்கள் முன் நிறுத்துகிறேன். யோசித்துப் பாருங்கள்.

**என்ன?**

ஞானஸ்நானத்தைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் வேதத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கவனிப்போம்.

★ பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையை தள்ளிவிட்டார்கள். (லூக் 7 : 30)

★ இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, இப்போது இடம் கொடு. இப்படி **எல்லா நீதியையும்** நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவன் அவருக்கு (ஞானஸ்நானம் பெற) இடம் கொடுத்தான். (மத். 3 : 15)

★ .... ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. (பேதுரு 3 : 21)

★ .... நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி .... ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (மத். 28 : 19)

பிரியமானவர்களே! மேலே சுட்டிக்காட்டிய நான்கு வசனங்கள் மூலம் ஞானஸ்நானம் என்பது மனித கற்பனையாய் இராமல் இது,

**தேவ ஆலோசனை**

**தேவ நீதி**



**தேவனைப்பற்றும் உடன்படிக்கை**

**தேவ கட்டளை**

என்பதை அறிந்து கொண்டு இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

எனவே ஞானஸ்நானம் என்பது அதிமுக்கியமானதும் அவசியம் கீழ்ப்படிந்து எடுக்க வேண்டும் என்பதும் மிக சரியானதாகும்.

சிலர் சிலுவையில் இருந்த கள்ளன் ஞானஸ்நானம் பெறவில்லையே இப்படி இருக்க இன்றைக்கு என்னோடு கூட பரதீசில் இருப்பாய் என்று சொன்னாரே? அது எப்படி என்று சிலர் வாக்குவாதம் செய்கின்றனர்.

இந்தக் கள்வன் காரியத்தில் மூன்று முக்கியமான காரியத்தை நாம் கவனிக்க வேண்டும்.

★ முதலாவது பரலோகத்தில் இருப்பாய் என்று சொல்லாமல் **பரதீசுக்குள் இருப்பாய்** என்று இயேசு சொன்னதை கவனியுங்கள். பரதீசு என்பது வேறு பரலோகம் என்பது வேறு – பரலோகத்தில் தேவன் இருக்கிறார். பரதீசு என்பது தேவனுக்குள் மரிக்கிற ஆத்துமாக்கள் தங்கள் வரிசைப்படி இளைப்பாறுகிற இடம். இங்கு இளைப்பாறும் ஆத்துமாக்கள் தங்கள் வரிசைப்படி உயிர்த்தெழுந்து தங்கள் பங்கை அடைவார்கள்.

ஆனால் நீங்கள் அவரது வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவரோடு வாழவிரும்பினால் அதற்கு முதற்படி வேதவசன ஒழுங்கின்படி ஞானஸ்நானம் என்பதை மறந்து விடாதீர்கள்.

★ இரண்டாவதாக சிலுவைக்கள்ளன் தனது கடைசிக் காலத்தில் தான் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறான். அதன் பிறகு அவன் சிலுவைவிட்டு இறங்காமல் மரித்துப் போனான். இப்படியிருக்க சிலுவைக்கள்ளன் ஞான ஸ்நானம் பெற்றானா? என்று கேள்வி கேட்டுக் கொண்டு நடமாடும் கள்வர்களைக்

குறித்து தேவ நியாயத் தீர்ப்பு அதிகமாக இருக்கும்.

★ மூன்றாவதும் மிக முக்கியமானதுமாகிய காரணத்தை அறியுங்கள். யோவான் மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞான ஸ்நானம் கொடுத்தான். ஆனால் கிறிஸ்து சீஷர்களாக்க ஞானஸ்நானம் கொடுங்கள் என்றார். எனவே யோவான் ஞானஸ்நானம் வேறு. இயேசுகிறிஸ்து கட்டளை கொடுத்த ஞானஸ்நானம் வேறு.

இயேசு ஞானஸ்நானத்தைக் குறித்த கட்டளையை புதிய ஏற்பாட்டு சபைக்கு அவர் உயிரோடு எழுந்த பின்னரே கொடுத்தார். அப்போது கள்ளன் உயிரோடு இல்லை. எனவே அவன் ஞானஸ்நானம் எடுக்கவில்லை.

இயேசு கட்டளையிட்ட காலம் முதல் உயிரோடு இருந்த – இருக்கும் யாவரும் இந்த ஞானஸ்நானம் பெற வேண்டியது அவசியம்.

யோவானால் ஞானஸ்நானம் பெற்ற பலர் மீண்டும் இயேசு கற்பித்ததும் கட்டளையிட்டதுமாகிய ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள் என்பது வேதத்தில் எழுதப்பட்டுள்ள மிகப் பெரிய ஆதாரம்.

அப்போஸ்தலர் 19–ஆம் அதிகாரத்தில் 3,4,5 வசனங்களை வாசித்தால் எபேசு சபையார் இப்படி சரியான ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள் என்பதை அறிய முடியும்.

...... அதற்கு அவர்கள் **யோவான் கொடுத்த ஞானஸ்நானம்** பெற்றோம் என்றார்கள். அப். 19 : 3

அதைக் கேட்ட போது கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் **ஞானஸ்நானம்** பெற்றார்கள். (அப். 19 : 5)

எனவே சிலுவைகள்வன் உயிரோடு இருக்கும் வரை புதிய ஏற்பாட்டு சபைக்கு ஞானஸ்நானம் பற்றிய கட்டளை கொடுக்கப்படவில்லை. எனவே அவன் எடுக்கவும் அவசியம் இல்லை. உயிர்த்தெழுதலின் போது பழைய ஏற்பாட்டுப்



பரிசுத்தவான்களுக்குரிய சிலாக்கியத்தை மாத்திரம் அவன் பெறுவான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**எதற்கு?**

★ மாற்கு எழுதின சுவிசேஷம் 16 : 16 ஐ வாசித்துப் பாருங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று எழுதப்பட்டுள்ளது.

எனவே விசுவாசம் உள்ள எந்த மனிதனின் இரட்சிப்புக்கும் ஞானஸ்நானம் அவசியம். இரட்சிப்பு என்பதற்கு விடுதலை என்பது அர்த்தம். இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து பஸ்காவைப் புசித்து விடுதலை பெற்று வந்தாலும் அவர்களைக் கர்த்தர் செங்கடல் வழியாய் கடக்கப் பண்ணினார்.

இந்த செங்கடலைக் கடக்கும் போது ஒரு முக்கிய காரணம் நடைபெற்றது. அவர்களைப் பின்தொடர்ந்து வந்த பார்வோனின் சேனை முற்றிலும் மூழ்கடிக்கப்பட்டது மாத்திரமல்ல இன்று கண்ட இந்த எகிப்தியனை இனி நீங்கள் காண்பதில்லை என்ற வாக்குத்தத்தமும் அருளப்பட்டது.

இந்த செங்கடல் சம்பவத்தை பவுல் I கொரிந்தியர் 10 : 2 இல் “எல்லோரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்” என்று எழுதியிருக்கிறார்.

எப்படி செங்கடல் அனுபவம் இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் நிலையான வேறுபிரிதலை உண்டு பண்ணியதோ அதைப்போலவே ஞானஸ்நானம் இரட்சிக்கப்பட்ட நபரை பாவத்தில் இருந்து பூரணமாக விடுதலைப்படுத்துகிறது.

★ இதை அப்போஸ்தலர் 22 : 16இல் தெளிவாக உணர முடியும். “நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு **ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு**” என்றான் என்பதிலிருந்து

பாவங்கள் போகக் கழுவப்பட ஞானஸ்நானம் அவசியம் என்று புரிகிறது அல்லவா?

★ யோவான் 3 : 5 இல் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்கிறேன் என்று இரட்சகர் சொன்னதை பாருங்கள். பரலோக இராஜ்யத்தில் பங்கடைய பிரவேசிக்க ஞானஸ்நானம் அவசியம்.

★ இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறியவுடனே பரலோகம் திறக்கப்பட்டதை இந்தப் பகுதியுடன் இணைத்து சிந்தனை செய்து பாருங்கள். ரோமர் 6 : 5 இலும் இதையே அப்போஸ்தலனாகிய பவுல் முக்கியப்படுத்திக் கூறுகிறார். கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமெல்லாரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா? ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் ரோமர் 6 : 35

மேலே நீங்கள் வாசித்த பகுதியில் இருந்து (1) நாம் இரட்சிக்கப்பட, (2) பாவங்கள் போகக் கழுவப்பட (3) பரலோகத்தில் பிரவேசிக்கும் தகுதி பெற (4) உயிர்த்தெழுதலில் பங்கு பெற ஞானஸ்நானம் மிக அவசியம் என்ப தை உணர்ந்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

### எப்படி?

வேதபுஸ்தகத்தில் ஞானஸ்நானம் பெற்ற சம்பவங்கள் எழுதியுள்ள இடங்களை வாசித்துப் பார்த்தால் மற்றொரு காரியம் உங்களுக்குப் புலப்படும். ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வெறுமனே எழுதாமல் அதற்கு முன்பு ஒரு சில குறிப்பிட்ட கிரியைகள் இணைத்தே எழுதப்பட்டு இருக்கும்.



அவைகள் சாதாரண நிகழ்வுகள் அல்ல. அவைகள் ஞானஸ்நானம் எடுக்க வேண்டிய ஒழுங்குகள் மற்றும் நியமங்களைக் குறித்தவைகள். ஞானஸ்நானம் என்பது விருப்பப்படியோ அல்லது வசதிப்படியோ எடுக்கக்கூடிய ஒன்றல்ல, வேதம் மிகச்சரியான ஒழுங்கும் முறையும் அதற்கு உண்டு என்று தெளிவாய் நமக்குப் போதிக்கிறது. அதன்படியே செய்ய வேண்டும்.

(அ) **விசுவாசமுள்ளவனாய்** (மாற்கு 16 : 16) ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்ற வசனத்தில் ஞானஸ்நானம் பெறுகிறவன் முதற்கண் விசுவாசம் உள்ளவனாய் இருக்க வேண்டும்.

இயேசு தேவனுடைய குமாரன் என்றும் அவர் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உடையவர் என்றும், அவர் நியாயாதிபதியும் ஆண்டவருமாயிருக்கிறார் போன்ற காரியங்களை அறிந்து விசுவாசிக்கிறவர்களே ஞானஸ்நானம் பெற வேண்டும்.

கர்த்தரை இரட்சகராக ஏற்று விசுவாசியாத பெரியவர்களோ, வேத வசனத்தை அறிந்து விசுவாசிக்கக் கூடாத நிலையில் உள்ள சிறுவர்களோ ஞானஸ்நானம் எடுக்க முடியாது.

விசுவாசித்தவர்கள் அல்லது ஏற்றுக் கொண்டவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக வேதம் சொல்லுகிறது. "பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் **விசுவாசித்தபோது** புருஷர்களும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்." (அப். 8 : 12) "சீமோனும் **விசுவாசித்து** ஞானஸ்நானம் பெற்று...." (அப். 8 : 13)

அதற்கு பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது அவன் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று

**விசுவாசிக்கிறேன்** என்று சொல்லி.... இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

இந்த மூன்று மேற்கோள்கள் போதும் என்று நினைக்கிறேன். இந்த வசனங்களை நிதானித்துப் பார்த்தால் விசுவாசிக்க முடியாத பிள்ளைகள் ஞானஸ்நானம் எடுக்கத் தேவையில்லை என்றும் அவர்களுக்குக் கொடுக்கத் தேவையில்லை என்றும் உங்களால் உணர முடியும்.

**குழந்தை ஞானஸ்நானம் உண்டா?**

அப்போஸ்தலர் நடபடிகள் உட்பட புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதை உங்களால் காண முடியாது. இயேசுவினிடத்தில் சிறுபிள்ளைகளைக் கொண்டு வந்தபோது அவர்கள் மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்தாரே தவிர அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. கொடுக்கவும் சொல்லவில்லை.

எனவே வேதத்தில் சொல்லப்படாத, வேத வசன ஆதாரமில்லாத ஒரு ஒழுங்கற்ற முறை குழந்தை ஞானஸ்நானம் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். இதற்காக நீங்கள் வருத்தப்படாதீர்கள்.

**போலிக்காரணங்கள் :**

குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்தி சொல்லப்படும் சில கருத்துக்களை ஆராய்ந்து பார்ப்பது நமக்கு நல்லது என்று நம்புகிறேன். இதை வாசிக்கும் என் அன்பு உடன்பிறப்பே நீங்கள் ஒருவேளை குழந்தை ஞானஸ்நானம் பெற்றிருப்பீர்கள் என்றால் மனவேதனை அடைந்து சோர்ந்து போய் விடாதீர்கள்.

நமது ஆண்டவர் நல்லவர். எம்மாவூர் சீஷர்களுக்கு வேத வசனத்தை விளக்கிக் காட்டி அவர்கள் உள்ளங்களைக்



கொழுந்து விட்டு எரியச் செய்தது போலவே உங்களுக்கு இந்த வேளையில் வேத வசனத்தை விளக்கிக் காட்டுவார். வேதவசன வெளிச்சத்தில் நம்மை நிதானித்துப் பார்ப்போம்.

★ இயேசு கிறிஸ்து குழந்தையாக இருந்தபோது எட்டாம் நாளில் அவரின் பெற்றோர் அவரை தேவாலயத்திற்குக் கொண்டு வந்து அவருக்கு விருத்தசேதனம் செய்தது போல நாம் நமது குழந்தைகளுக்கு விருத்த சேதனத்திற்குப் பதிலாக ஞானஸ்நானம் கொடுக்கிறோம் என்பது ஒரு சிலர் கூறும் கருத்து.

இதனை யோசித்துப் பாருங்கள். விருத்தசேதனம் எந்த விதத்திலும் ஞானஸ்நானத்திற்கு மாற்றாகாது. விருத்தசேதனம் என்பது யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட நியமம். ஞானஸ்நானம் என்பது சகல ஜாதிக்கும் கொடுக்கப்பட்ட தேவ கட்டளை. விருத்த சேதனம் என்பது **ஆண்களுக்கு** மட்டும் சொல்லப்பட்ட நியமம், ஞானஸ்நானம் என்பது ஸ்திரீ, புருஷர் இருபாலருக்கும் சொல்லப்பட்ட தேவபிரமாணம்.

சிலர் சொல்லுகிறபடி விருத்தசேதனத்திற்கு மாற்றாக ஞானஸ்நானம் என்ற கொள்கை ஆதிசபையில் கடைபிடிக்கப்பட்டு இருந்தால் ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்ற தீமோத்தேயு யூத முறையின்படி விருத்த சேதனம் செய்திருக்க மாட்டாரே (அப். 16 : 1 முதல் 3)

★ எனவே புறஜாதிகளின் சபைக்கு விருத்தசேதனம் இல்லை. அதற்கு மாற்றாக குழந்தை ஞானஸ்நானமும் இல்லை.

கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறக்கும் பிள்ளைகள் பிறப்பிலேயே பெற்றோரின் கிருபையால் பரிசுத்தமாக்கப் படுகிறார்கள். எனவே அவர்கள் மனம்திரும்ப வேண்டியதில்லை. தாராளமாக ஞானஸ்நானம் அவர்களுக்குக் கொடுக்கலாம் என்பது சிலரின் கருத்து.

இந்தக் கூற்றை நன்றாக யோசித்துப் பாருங்கள். பிள்ளைகள் இயற்பிலேயே பிறப்பில் பரிசுத்தமாயிருக்கிறார்கள் என்ற இவர்கள் வாதத்தை அப்படியே ஏற்றுக் கொள்வோம். பிள்ளைகள்தான் பரிசுத்தமாயிருக்கிறார்களே அவர்களுக்கேன் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். அது தேவையில்லை விட்டுவிடலாமே என்ற கேள்வி எழுகிறது அல்லவா. எனவே இந்தக் காரியமும் குழந்தை ஞானஸ்நானத்திற்கு எதிரானதே.

★ இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்து வந்த சம்பவத்தை மேற்கோள்காட்டி "அவர்கள் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" என்று பவுல் எழுதியதை (I கொரி 10 : 2) சிலர் குழந்தை ஞானஸ்நானத்திற்கு சாதகமாகப் பயன்படுத்துவார்கள்.

பல வருடங்களுக்கு முன்பாக ஒரு பெரிய இறையியல் கல்லூரியில் பாட வேளையின் போது பேராசிரியர் ஒருவர் இந்த வேதப் பகுதியை மேற்கோள் காட்டி "செங்கடல் வழியே பெரியவர்கள் மாத்திரமல்ல குழந்தைகளும் உடன் சென்றார்கள். எனவே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில் தவறு இல்லை" என்று விளக்கினார்.

அப்போது நான் மாணவர் வரிசையில் அமர்ந்து இருந்தேன். உடனே எழுந்து அவரைப் பார்த்து, செங்கடல் வழியாக மனிதர்கள் மாத்திரமல்ல ஆடு மாடு போன்ற மிருக ஜீவன்களும் கடந்து வந்ததே. அவைகளும் ஞானஸ்நானம் பெற்றதாக அர்த்தமா? என்று கேட்டேன். பேராசிரியருக்கு பதில் சொல்ல இயலவில்லை. நானும் கொஞ்சநாட்களுக்குப் பிறகு எனது இறையியல் பட்டப்படிப்பை நிறுத்தி விட்டேன்.

நான் இதை இங்கு எழுதக் காரணம் உண்டு. மேலே சொல்லப்பட்ட செங்கடல் சம்பவத்தை மாத்திரமல்ல புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் **வீட்டார் அனைவரும்** என்ற பகுதிகளை மேற்கோள்காட்டி அந்தக் குடும்பத்தில் உள்ள



குழந்தைகளும் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றதாக சிலர் போதிக்கின்றனர்.

".... அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்" அப் 16 : 33

ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுத்தது உண்டு. I கொரி 16 : 16.

இந்த வசனங்களில் வரும் **வீட்டார் அனைவரும்** என்ற பதத்தை சரியாய் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்த வீடுகளில் சிறுபிள்ளைகள் இருந்தார்கள் என்றோ இல்லை என்றோ எந்தக் குறிப்பும் திட்டமாகக் கிடையாது. எனவே பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று உறுதியாகக் கூற இயலாது.

அடுத்து அவர்கள் வீடுகளில் ஞானஸ்நானத்திற்கு முன்பும் பின்பும் நடைபெற்ற சம்பவங்களை நோக்கினால் குழந்தைகள் ஞானஸ்நானத்தில் பங்கேற்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

சிறைச்சாலை அதிகாரி வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். அப் 16 : 32 என்ற வசனத்தின்படி நிச்சயமாகக் குழந்தைகள் போதனையைக் கேட்டு இருக்க மாட்டார்கள் அல்லவா?

தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான். அப் 16 : 34 இந்த வசனத்தின்படி பிள்ளைகள் இருந்திருந்தால் அவர்கள் எப்படி விசுவாசித்திருக்க முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

எனவே குழந்தைகளால் 1. மனம் திரும்ப முடியாது 2. விசுவாசிக்க முடியாது 3. உடன்படிக்கை செய்ய முடியாது 4. வசனத்தை ஏற்றுக் கொள்ள முடியாது இப்படி இருக்க அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது எந்த விதத்திலும் திருவசனத்தின் அடிப்படை அல்ல. அது ரோமப் பேரரசின்

தலையீட்டால் இடையில் வந்த கலப்பானது என்பதே சரித்திர உண்மை.

(ஆ) **ஞானஸ்நானம்** என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தத்தை கவனித்துப் பாருங்கள். புதிய தமிழ்மொழிபெயர்ப்பு வேதத்தில் மிகச்சரியாக தெளிவாக, அழகாக **திருமுழுக்கு** என்று குறிப்பிட்டிருப்பது மிகச் சிறப்பான ஒன்றாகும்.

அப்போஸ்தல நடபடிகள் முழுவதும் ஞானஸ்நானம் தண்ணீரில் முழுவதும் உடல் மூழ்கும்படியே கொடுத்து இருக்கிறார்கள். இயேசுவும் அப்படித்தான் ஞானஸ்நானம் எடுத்தார் என்பது சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

ஞானஸ்நானம் கொடுக்கப் பாத்திரத்தில் தண்ணீர் போதும் என்றால் யோவான் ஸ்நானகன் யோர்தானில் கொடுக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. யோவான் யோர்தானில் ஞானஸ்நானம் கொடுத்தது மாத்திரமல்ல அயினோன் என்னும் இடத்தில் தண்ணீர் மிகுதியாய் இருந்தபடியால் யோவான் அங்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். (யோவான் 3 : 23) என்ற குறிப்பிலிருந்து அவன் மூழ்கிதான் ஞானஸ்நானம் கொடுத்தான் என்று அறிய முடிகிறது.

இயேசு கிறிஸ்து, மற்றும் கந்தாகே என்பவளின் மந்திரி, ஞானஸ்நானம் பெற்றபோது அவர்கள் தண்ணீரில் இறங்கினார்கள். தண்ணீரிலிருந்து ஏறினார்கள் என்ற வார்த்தை குறிக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். இயேசு **ஜலத்திலிருந்து** கரையேறின உடனே மத் 3 : 16 (Jesus... went up straight way out of the water) இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின போது அப் 8 : 32,39 (And they went into the water... and when they came up out of the water)

மேலே உள்ள வசன சான்றுகளிலிருந்து ஞானஸ்நானம்



என்பது முழு உடலையும் ஜலத்திற்குள் உள்ளடக்க வேண்டும் என்பது தெளிவாகப் புலப்படுவது மாத்திரமல்ல. தெளித்து ஸ்நானம் கொடுப்பது வேதத்தில் சொல்லப்படாததும் அப்போஸ்தலர்களால் கடைபிடிக்கப்படாத ஒன்று என்றும் தெரிகிறது.

ஞானஸ்நானத்தின் போது முழு உடலையும் தண்ணீருக்குள் மூழ்கச் செய்வதற்கு உண்மையிலே ஒரு அடையாள அர்த்தம் பொதிந்து இருக்கிறது. ரோமர் 6 : 4இல் .... அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் என்று எழுதப்பட்டுள்ளது.

அருமையானவர்களே! இந்தக் காரியத்தை நன்றாய் தியானம் செய்து பாருங்கள். ஞானஸ்நானம் என்பது அடக்கப்பண்ணப்படுதலுக்கு ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு மனிதனை அடக்கம் செய்யும் போது மண்ணை வாரி அவன் தலையில் போடுவதில்லை. மாறாக அவனது உடலை மண்ணுக்குள் அமிழ்த்துகிறோம். அதைப்போலவே ஞானஸ்நானம் பெறுகிற நபரின் மேல் தண்ணீரைத் தெளிப்பது அல்ல அந்த நபரையே தண்ணீரில் மூழ்கச் செய்ய வேண்டும் என்பது வேதம் சொல்லும் போதனை.

இவ்வளவு தெளிவாக வேத வசனம் இருந்தாலும் மிக நீண்ட நாட்களாகத் திருச்சபையில் அநுசரித்து வரும் தெளித்தலை விட்டுவிட நமக்கு மனம் வருவதில்லை. நமக்குத் திருச்சபையின் பாரம்பரியம் முக்கியமல்ல. ஆதித் திருச்சபையின் மாதிரியே முக்கியம். அப்போஸ்தலர்கள் செய்யாத ஒன்றை நாம் நடப்பிப்பது மிஞ்சின நீதியாக இருப்பது மாத்திரமல்ல. விசுவாச துரோகமாகவும் இருக்கும்.

அப்போஸ்தலர் 2 : 41 ஆம் வசனத்தில் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றதை சிலர் மேற்கோள்காட்டி இத்தனை

பேருக்கு மூழ்கிக் கொடுப்பது சாத்தியமா? எனவே தெளித்துத் தான் கொடுத்து இருப்பார்கள் என்று வெகுளித்தனமாகக் கூறுகிறார்கள்.

3000 பேருக்கு மூழ்கி ஸ்நானம் கொடுப்பது மிகப்பெரிய காரியமல்ல, 12 அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுக்க இறங்கினால் ஒரு அப்போஸ்தலருக்கு 250 பேர் தான் கிட்டுவார்கள். இது என்ன பாரமான காரியமா?

சென்னையில் பாஸ்டர் M.K. சாம்சுந்தரம் அவர்கள் 94 ஆம் ஆண்டுத் துவக்கத்தில் சிறப்பு ஞானஸ்நான ஆராதனையில் 500 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இந்தச் செய்தி தினசரி பத்திரிகையில் கூட வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. எனவே திரள் கூட்டத்தைக் காட்டி ஸ்நான முறையை மாற்றிக் கூறுவது சரியான புரட்டு என்பதை உணருங்கள்.

சிலர் மூழ்கிதான் ஸ்நானம் எடுக்க வேண்டும் என்று வேதத்தில் எங்கு எழுதப்பட்டுள்ளது என்று என்னிடமே கேட்கிறார்கள். ஸ்நானம் என்றாலே முழுவதும் நனைவது தான். இதில் **மூழ்கி** என்ற வார்த்தையை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. எனினும் உங்கள் ஐயப்பாடு நீங்கும்படி இரண்டு வசனங்களைக் குறிப்பிடுகிறேன். வாசித்துப் பாருங்கள்.

(I) தாம் அதைத் (சபை) திருவசனத்தைக் கொண்டு **தண்ணீர் முழுக்கினால்** சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும் ஒப்புக் கொடுத்தார். எபேசி 5 : 26,27

(II) தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தீத்து 3 : 5

இந்த மேற்கோள்கள் போதுமென்று நினைக்கிறேன். ஞானஸ்நானம் ஜலத்தில் மூழ்கி எடுக்க வேண்டுமே தவிர தெளித்தோ அல்லது கொடியின் (சிலுவைக்கொடி) கீழ் நடந்து



கடந்து சென்றோ எடுக்கக்கூடாது.

★ **பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில்** அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசியுங்கள். (மத். 28 : 19) என்று இயேசு சொன்னது மிக முக்கியமானது. இது இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படும் நபரை சரியான சத்தியத்தில் நடத்தும் முதல்படியே ஞானஸ்நானம் தான். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் இயேசு சொன்னபடியே கொடுக்கும் போது தேவனின் தெய்வீகத்தை ஒரு மனிதன் சரியாகப் புரிந்து கொண்டு ஆரம்பமே மிக நேர்த்தியாக ஆரம்பிக்கிறான்.

அப்போஸ்தல நடபடிகள் 2 : 38 மற்றும் 8 : 16 ஆகிய வசனங்களை சிலர் மேற்கோள்காட்டி இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். பிதா-குமாரன்-பரிசுத்த ஆவி என்று சொல்லக்கூடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே சரியான நாமம் என்று சொல்லக்கூடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே சரியான நாமம் என்று சொல்லி மக்களைக் குழப்பிக் கொண்டு இருக்கின்றனர். இத்தகைய கூட்டம் பெருகி வருவது கடைசிக்காலத்திற்குரிய அடையாளம் என்று நான் கருதுகிறேன்.

பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்பதைக் குறித்து தனியாக ஒரு அத்தியாயமே எழுதியுள்ளேன். இங்கு அப்போஸ்தலர்கள் எந்த நாமத்தில் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்பதை விளக்க விரும்புகிறேன்.

அப்போஸ்தல நடபடிகளில் இயேசுவின் நாமம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் என்ற வார்த்தைகள் எழுதப்பட்டு இருப்பதற்கு மூலக்காரணத்தை நாம் சரியாக நிதானிக்க வேண்டியது அவசியம்.

இயேசுவின் ஊழிய நாட்களுக்கு முன்பே யோவான் ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். யோவானின் சீஷர்கள் இந்த ஸ்நானத்தை தொடர்ந்து கொடுத்து வந்தார்கள். உயிர்த்தெழுந்த இயேசு சீஷர்களுக்கு ஞானஸ்நான கட்டளை கொடுத்தபடியால் அவர்களும் ஞானஸ்நானம் கொடுக்க ஆரம்பித்தனர்.

இப்படி இரண்டு விதமான ஞானஸ்நானம் புழக்கத்தில் வந்தபோது சரியான வேறுபாட்டை மக்கள் புரிந்து கொள்ள யோவானின் ஞானஸ்நானம் என்றும் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் என்றும் வழங்கப்பட்டது. மக்களுக்குத் தெளிவாக புரிய வைக்கவே இந்த வழக்கு ஏற்பட்டது.

சிலரைப் பார்த்து நீங்கள் எந்த சபைக்குப் போகிறீர்கள் என்று கேட்டால் "நாங்கள் கிறிஸ்டோபர் அய்யா சபைக்குப் போகிறோம்" என்று சொல்கிறார்கள். என் சபை கிடையாது. இது கிறிஸ்துவின் சபை. அதற்கு கிறிஸ்டோபர் சபை என்று அல்ல. இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ் என்று பெயர்ப் பலகை வைத்து இருக்கிறோம்.

இப்படியிருக்க அவர்கள் அப்படி சொல்வதற்குக் காரணம் எளிதாகப் புரியவைக்கவே அன்றி வேறெதற்கும் இல்லை. தொடர்பு கொள்ளும்போது இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ் என்று தான் எழுதுகிறார்கள்.

இதைப் போலத்தான் அப்போஸ்தலர்கள், யோவான் ஞானஸ்நானத்திலிருந்து வேறுபடுத்திக் காட்ட இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் என்றார்கள். ஆனால் கொடுக்கும் போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் தான் கொடுத்தார்கள்.

ஒரு சம்பவத்தை விளக்குகிறேன். கவனித்துப் பாருங்கள். அப்போஸ்தலர் 19ஆம் அதிகாரம் முதல் 5 வசனத்தை வாசித்துப் பாருங்கள். யோசித்துப் பாருங்கள். பவுல் எபேசுவுக்கு



வந்தபோது சீஷர்களைப் பார்த்து பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டார். (வசனம் 2)

சீஷர்களோ பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்பட வில்லையே என்றார்கள். (வசனம் 2) இதைக் கேட்ட பவுலுக்கு ஒரு அதிர்ச்சி. அது எப்படி பரிசுத்த ஆவியைப் பற்றி இவர்கள் கேள்விப்படாமல் ஞானஸ்நானம் பெற்று இருக்க முடியும் என்று சிந்தித்தார். பொரி தட்டியது உடனே கேட்டார். நீங்கள் எந்த ஞானஸ்நானம் எடுத்தீர்கள் என்று அதற்கு யோவான் கொடுத்த ஸ்நானம் பெற்றோம் என்றார்கள். (வசனம் 3)

இங்கே நீங்கள் உள்ளடக்கத்தைப் புரிந்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன். பவுல் எந்த ஞானஸ்நானம் என்று கேள்வி கேட்டு விடை கண்டார். ஆம் ஞானஸ்நானம் பெறும்போது பரிசுத்த ஆவியின் பெயர் உச்சரிக்கப்பட வேண்டும் என்பது இயேசு சொன்ன நியமம் என்பதை நினைவில் வையுங்கள்.

பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள் என்று மூலைக்கல்லாகிய இயேசு சொல்லியிருக்க, அஸ்திபாரக் கற்களாகிய அப்போஸ்தலர்கள் நிச்சயம் பிழை செய்து இருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இப்படி திரித்துவ நாமத்தில் கொடுத்ததாக அப்போஸ்தல நடபடிகளில் எழுதப்படவில்லை. இயேசுவின் நாமத்தைக் குறித்துதான் எழுதப்பட்டுள்ளது என்று சிலர் சொல்லலாம். ஆனால் இயேசுவே சொன்ன ஒரு காரியத்திற்கு வேறு எவரின் அங்கீகாரமும் அவசியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசுவின் நாமத்தில் மாத்திரமல்ல, யோவான் ஞானஸ்நானத்திலிருந்து வேறுபடுத்திக் காட்ட பல பெயர்கள் அப்போஸ்தல நடபடிகளில் எழுதப்பட்டுள்ளது கவனிக்க வேண்டிய விஷயம். சில இடங்களில் எந்தப் பெயரும் குறிப்பிடாமல் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று

எழுதப்பட்டுள்ளது.

இப்படியிருக்க எந்த நாமத்தைக் கூறாமல் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று சொல்ல முடியுமா? அப்போஸ்தல நடபடிகளில் ஞானஸ்நானம் பற்றி சொல்லிய 9 சந்தர்ப்பங்களை கீழே குறிக்கிறேன். அதில் நாமத்திற்கு அடுத்த காரியங்கள் நன்றாய் கவனித்துப் பாருங்கள்.

1. ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப் 2 : 38 (இதில் **கர்த்தராகிய** என்ற வார்த்தை இல்லை)

2. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றவர்களாகக் கண்டு... (அப் 8 : 15) (இதில் கிறிஸ்து விடுபட்டு இருப்பதைக் கவனியுங்கள்.)

3. கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். (அப். 10 : 48) (இதில் கிறிஸ்து இயேசு என்ற வார்த்தை இல்லை)

4. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப். 19 : 5) (இதில் கிறிஸ்து என்ற வார்த்தை இல்லை.)

5. பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (அப். 8 : 38) (இதில் எந்த நாமமும் குறிப்பிடப்படவில்லை)

6. அவன் பார்வையடைந்து எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான். (அப் 9 : 18) (எந்த நாமமும் குறிப்பிடப்பட வில்லை)

7. அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 16 : 15) (எந்த நாமமும் எழுதப்படவில்லை)

8. அவனுடையவர்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப். 16 : 33) (எந்த நாமமும் எழுதப்படவில்லை)

9. கொரிந்தியரில் அநேகரும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப். 18 : 8) (எந்த நாமமும்



கூறப்படவில்லை.)

பிரியமானவர்களே! மேலே உள்ள 9 மேற்கோள்களில் ஐந்து இடங்களில் எந்த நாமத்தையும் குறிப்பிட்டு எழுதாததினால் அவர்கள் எந்த நாமத்திலும் ஞானஸ்நானம் பெறவில்லை என்று கூறமுடியுமா? அல்லது கர்த்தர், இயேசு கிறிஸ்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று பலவிதமாக எழுதப்பட்டபடியால் இப்படிப் பலவிதத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா?

முடியாது என்பது உங்கள் பதில் அல்லவா. அப்போஸ்தலர்கள் இயேசு சொன்னபடி பிதா, குமாரன், பரிசுத்த ஆவி நாமத்தில் கொடுத்தார்கள் என்பது உண்மை. தெளிவுள்ளவர்களாய் இருங்கள்.

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் என்று தான் கூறியுள்ளார். **நாமங்களில்** என்று பன்மையில் கூறவில்லை. அந்த நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதே என்று சில திரிபுக்கொள்கையாளர்கள் கூறுகிறார்கள். அது மட்டுமல்ல. பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்பது இயேசுவுக்கு உள்ள பல பட்டப் பெயர்கள் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இதை நீங்கள் சரியாக உணர்ந்து கொண்டு யோசித்துப் பார்க்க வேண்டும், பட்டப்பெயர்கள் ஒரு நபருக்கு இருக்க முடியும் என்பது உண்மை. ஆனால் பிதா-குமாரன்-பரிசுத்த ஆவி என்பது பட்டப்பெயர், என்பது ஒத்துக்கொள்ள முடியாது. காரணம் நிச்சயம் ஒருவரைக் குறிக்கவில்லை.

இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது இவர் (இயேசு) என் நேசக் **குமாரன்** இவரில் பிரியமாய் இருக்கிறேன் என்று **பரலோகப்பிதா** கூறினார். ஆவியானவர் புறாவைப் போல் அவர் மேல் இறங்கினார். இங்கே திரித்துவத்தின் அழகான காட்சியைப் பாருங்கள். எனவே குமாரனின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதே அல்லாமல் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்

நாமம் அல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இந்த அத்தியாயத்தில் முழுக்க முழுக்க வேத வசனத்தையே சுட்டிக்காட்டி விளக்கியிருக்கிறேன். மனித கற்பனைக்கும் பாரம்பரியத்திற்கும், விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்.

சிலர் ஒரே ஞானஸ்நானம் உண்டு என்று உண்மை ஞானஸ்நானம் எடுக்கத்தடை செய்வார்கள். உண்மையில் ஒரே ஞானஸ்நானம் தான் உண்டு. அது மேலே நீங்கள் வாசித்த முறையின்படி எடுக்க வேண்டியதும் கொடுக்க வேண்டியதுமாகும்.

அதை விடுத்து வேத வசனத்திற்கு ஒத்து வராத முறையில் நீங்கள் ஞானஸ்நானம் பெற்று இருந்தால் எபேசு சபையாரைப் போல் வேத வசனத்தின்படி சரியான ஞானஸ்நானத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தவறில்லை. வேத வசனத்தைக் கைக் கொள்ளுங்கள்.

★ மனம் திரும்பி

★ பாவமன்னிப்புக்கென்று

★ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில்

★ தண்ணீரில் மூழ்கி

ஸ்நானம் பெறுங்கள். கிறிஸ்து இயேசுவைத் தரித்துக் கொள்ளுங்கள்.

# 4

## ஏகத்துவமா? திரித்துவமா?

வேதாகமம் முழுவதும் அதாவது ஆதிகயாகமம் முதல் அதிகாரம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் கடைசியதிகாரம் வரை மிக நுட்பமாக விவரிக்கப்பட்ட மிகப்பெரிய ஆழமான சத்தியத்தைக் குறித்துத் தான் இந்த அதிகாரத்தில் கவனிக்கப்போகிறோம்.

வேத வசன விற்பன்னர்கள். வேத வசன விற்பனையாளர்கள். இவர்களிடையே சிக்கிக் கொண்டு சின்னாபின்னமாக்கப்படும் இந்த விலையேறப் பெற்ற சத்தியத்தைக் குறித்த விபரீத விமர்சனங்களால் இடறி இடம் பெயர்ந்து இடுக்கண் அனுபவிக்கும் கூட்டம் ஏராளம்.

பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற நாமத்திற்கடுத்த தர்க்கம் அப்போஸ்தலர் காலத்தில் இல்லை என்பது வேதம் தெளிவாக நமக்கு விளக்குகிறது. இப்படியிருக்க நவீன காலத்தில் இந்த பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்கு அடுத்த காரியத்தின் நிமித்தம் வரும் வாக்குவாதங்கள் வரையறுக்க முடியாத ஒன்று.

ஒருவர் கேட்டார். அது என்ன பிதா குமாரன் பரிசுத்த ஆவி, இது என்ன மூன்று கடவுளா (பிதா) 1 + (குமாரன்) 1 + (பரிசுத்த ஆவி) 1 = 3 கடவுள் என்றார். இதைக் கேட்ட மற்ற நபர் பிதா (1) X குமாரன் (1) X பரிசுத்த ஆவி (1) = 1 கடவுள் என்று சொல்லிவிட்டு நீங்கள் கூட்டினீர்கள் நான் பெருக்கல் செய்தேன் என்றார்.

ஆக இந்த தெய்வீகத்திற்கு அடுத்த காரியத்திற்கு

எல்லோருமே மனித மூளையின் அளவுகோலைப் பயன்படுத்தத் துவங்குவதாலே தான் காரியத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் முக்கியமான காரியத்தைக் கோட்டை விட்டு விடுகின்றனர்.

இந்த பிதா குமாரன் பரிசுத்த ஆவியை நம்புகிற சாராரில் சிலர் இதற்குக் கொடுக்கும் விளக்கம் மனதுக்குத் திருப்தியாக இருப்பது போன்று தோன்றினாலும் அவர் கூற்று அந்த உதாரணத்திலேயே தோல்வியைத் தழுவுகிறது என்பது உண்மை.

தண்ணீர் (திரவநிலை) அதைக் குளிர்படுத்தினால் பனிக்கட்டி (திடநிலை) அதைக் கொதிக்க வைத்தால் நீராவியாக (வாயுநிலை) மாறுகிறது. பொருள் ஒன்று ஆனால் மூன்று நிலை அடைவது போல் தேவன் ஒருவர் ஆனால் மூன்று தன்மை உடையவர் என்று விளக்கம் தருகின்றனர்.

இங்கே கவனியுங்கள். திட திரவ வாயு இவைகளில் ஏதாவது ஒரு நிலையில் தான் ஒரு சமயத்தில் இருக்க முடியும். இந்த விளக்கத்தைப் பயன்படுத்தி சிலர் தேவன் ஒருவர் திரியேகம் கிடையாது. தேவையில்லாத ஒன்று என்று கூறுகின்றனர்.

ஆவிக்குரிய மக்களாகிய நாம் மனித மூளையின் மூலம் தேவனின் தெய்வீகத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யக் கூடாது. மாம்சத்தில் கண்டறியும் விளக்கம் மாம்சீகமாகத்தான் இருக்கும். எனவே ஆவியானவரின் சரியான உதவியை நாம் தேடியே ஆக வேண்டும்.

தேவ சமூகத்தில் உட்கார்ந்து வேத புஸ்தகத்தைப் படித்தாலே போதும். இந்த பிதா குமாரன் பிரிசுத்த ஆவி என்ற காரியத்திற்கு எவரும் விளக்கம் கொடுக்காமல் புதிய தெளிவான உறுதியான பதிலைக் கண்டுவிடுவீர்கள்.

திரித்துவம் என்ற வார்த்தையை உங்களால் தேவத்தில்



காணமுடியாது. திரி + தத்துவம் என்ற இரண்டு வார்த்தையின் கூட்டே திரித்துவம். திரி என்றால் மூன்று என்று அர்த்தம். Three என்ற ஆங்கில வார்த்தையை எப்படி தமிழ் வார்த்தையோடு சேர்த்து திரித்துவம் என்று உண்டாக்கினார்கள் என்று ஒருவர் கேட்டார்.

இது அவருக்கு உள்ள தமிழ் அறிவின் குறைவையே காட்டுகிறது. திரி என்ற தமிழ் வார்த்தைக்கு மூன்று என்று தான் பொருள். (உம் திரிகடுகம்) எனவே தேவனின் மூன்று ஆள் தத்துவங்களைக் குறிக்க திரித்துவம் என்ற சரியான தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

நான் அடிக்கடி சொல்வதை மீண்டும் சொல்கிறேன். கவனியுங்கள். மஞ்சள் கண்ணாடியை மாட்டிக் கொண்டு பச்சை நிறத்தைப் பார்த்தால் நீல நிறமாகத் தெரியும். எனவே கண்ணாடியைக் கழற்றுங்கள். சொந்த உபதேசம், கருத்து இவைகளை வைத்துக் கொண்டு திரித்துவத்தைக் குறித்து நான் எழுதுவதைப் படித்தால் உங்கள் நேரம் வீணாகிவிடும் எனது எழுத்தும் அப்பிரயோஜனமாகி விடும்.

ஒரு கடவுளா? மூன்று கடவுளா? நல்ல கேள்வி, கேட்க வேண்டிய கேள்வி. சுற்றி வளைக்காமல் கூட்டிக் குறைக்காமல் பதில் சொல்லி விடுகிறேன். நம் தேவன் ஒருவரே அப்படியானால் பிதா குமாரன் பரிசுத்தாவி என்ற மூன்று ஆள் தத்துவங்களைக் குறித்து உங்கள் பதில் என்ன என்பது உங்கள் கேள்வியாக இருக்குமானால் அதற்கும் நான் சரியான மனத்தெளிவோடு பதில் எழுத விரும்புகிறன்.

பிதா, குமாரன், பரிசுத்தாவி என்ற நபர் (ஆள்) தத்துவம் உண்டு. இதை வேதம் மிக அழகாக ஆதியாகமம் முதல் மல்கியா வரை உள்ள பழைய ஏற்பாட்டுப் புத்தகத்திலும் மத்தேயு முதல் வெளிப்படுத்தல் வரை உள்ள புதிய ஏற்பாட்டுப் புத்தகத்திலும்

வெளிப்படையாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதி வைத்திருக்கிறார்.

இது என்ன புது குழப்பம் தேவன் ஒருவர் என்கிறீர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று நபர் தத்துவங்கள் இது எப்படிப் பொருந்தும் என்று நீங்கள் கேட்கலாம்.

கவனியுங்கள் நமது தேவன் ஒருவரே, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று நபர் தனித்தனியே கிரியைகளில் வித்தியாசப்படுகின்றனர். ஐக்கியத்தில் இணைந்தே இருக்கின்றனர். இது திரித்துவத்தின் பொருள். இதைப் புரிந்து கொள்வதற்கும் நம்புவதற்கும் மனித மூளையின்படி சற்று சிரமமாயினும் தேவ கிருபையின்படி தேவ ஆவியின் வெளிப்பாட்டால் மிக எளிமையாகப் புரிந்து கொள்ளலாம்.

திறந்த மனதுடன் வேதத்தை வாசித்துப் பார்த்தால் மிகச் சரியான சமநிலை வசனங்களை உங்களால் காணமுடியும். இவைகளை உங்களுக்கு மிகக் கருத்தோடு விளக்குகிறேன்.

தேவன் கலகத்தின் தேவனாயிராமல் சமாதானத்தின் தேவனாய் இருக்கிறார். அவர் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாய் சொல்லுகிறவர் அல்ல. எனவே வேத வசனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல் இசைவாய் நிற்பதே மகிமையான காரியம்.

முதல் முதல் இந்தத் திரித்துவ வெளிப்பாட்டை உலகுக்கு அளித்தவர் பிதாவாகிய தேவனே என்பது குறிப்பிடத்தக்க வேண்டிய விஷயம். ஆதி 1 : 1 இல் "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்ற வசனத்தில் மூலமொழியில் தேவன் என்ற வார்த்தைக்கு **எலோஹிம்** என்ற பதம் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இது பன்மையைக் குறிக்கும் சொல். அதாவது தேவர்கள் என்று பொருள். ஆனால் சிருஷ்டித்தார்கள் என்று எழுதாமல் சிருஷ்டித்தார் என்று



எழுதப்பட்டுள்ளது. தேவனின் பன்மையில் அதிசயமான இசைவை நமக்கு வெளிப்படுத்துகிறது.

ஒருவருக்குள் மூவர் அதாவது மூவர் ஒன்றாய் இருக்கிறார்கள் என்பது அதனுடைய சரியான பொருள். இது எப்படிக்கூடும் என்று கேட்க முடியாது. ஏனெனில் இது தெய்வீகத்திற்கடுத்த ஒன்று.

பிதாவாகிய தேவனே தமது தெய்வீகத்தின் பன்மைத் தன்மையை (திரித்துவத்தை) விளக்கி உள்ள வேத வசனங்களை நன்றாய் வாசித்துப் பாருங்கள்.

★ **நமது** சாயலாகவும், **நமது** ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக ஆதி 1/26.

★ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் **நம்மில்** ஒருவரைப் போல் ஆனான். (ஆதி 3 : 32)

★ **நாம்** இறங்கிப் போய் – அவர்கள் பாஷையை தாறுமாறாக்குவோம். (ஆதி 11 : 7)

★ பின்பு யாரை நான் அனுப்புவேன் யார் **நமது** காரியம்ாய்ப் போவான் (ஏசாயா 6 : 8)

தேவன் பேசிய நான்கு மேற்கோள்களில் நாம், நமது நம்மில் என்ற பன்மைப் பதங்கள் அறியாமையினாலோ அல்லது இலக்கணப்பிழையினாலோ உண்டானது அல்ல. அது தேவனுடைய திரித்துவத்தைக் குறித்த தேவ வெளிப்படுத்தலாயிருக்கிறது.

சிலர் இந்த **நம்மில், நாம்** என்ற பதங்கள் ஆண்டவர் தேவதூதர்களைப் பார்த்துப் பேசியது என்று திசைதிருப்புகின்றனர். இஃது உண்மையா என்பதை யோசித்துப் பாருங்கள். தேவ மகிமையும் தேவதூதனின் மகிமையும் ஒன்றா? தேவதூதர்கள் பணிவிடை ஆவிகளாய் இருக்க அவர்களைப் பார்த்து நமது காரியமாக யார் போவான் என்று கேட்பாரா? இது

கூடாத காரியம்.

அடுத்த நாம், நமது என்ற வார்த்தை தேவனின் மாட்சிமையையும் கனத்தையும் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளேயன்றி, பன்மைப்பதம் அல்ல என்று சிலர் வாதிடுகிறார்கள்.

இந்தக் கூற்று உண்மையாக இருக்குமானால் முழு வேதத்திலும் இந்தப் பதம் பயன்படுத்தப்படாமல் குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு இருப்பதின் இரகசியத்தை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இந்தக் கருத்தை வலியுறுத்த ஒரு போதகர் ஒரு வசனத்தை எடுத்து என்னிடம் மேற்கோள் காட்டி நாம் என்கிற பதம் மகத்துவத்தைக் குறிக்கும். உயர்வான சொல் என்று வாதிட்டார்.

எஸ்றா 6 : 12 "தரியுவாகிய நாம் இந்தக் கட்டளையைக் கொடுத்தோம். **இதின்படி ஜாக்கிரதையாய்ச்** செய்யப்படக்கடவது என்று எழுதியனுப்பினான்."

இந்த வசனத்தில் உள்ள நாம், கொடுத்தோம் என்று எழுதப்பட்டுள்ள பகுதியும், ஆதியாகமத்தில் தேவன் சொன்ன **நாம் நம்மில்** என்ற வார்த்தைகளும் ஒன்றல்ல என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். மூலமொழி உட்பட ஆங்கில வேதாகமத்தில் தேவன் சொன்னவைகளை US என்ற பன்மையிலும், தரியு சொன்னவைகளை I என்ற பதத்திலும் எழுதப்பட்டுள்ளது.

இந்த மேற்கோளைக் காட்டி உங்கள் திசை திருப்ப நினைப்பவர்களைக் குறித்து கவனமாய் இருங்கள். மிக முக்கியம் வாய்ந்த ஒரு வேத வசனத்தை உங்களுக்கு விளக்கி ஸ்திரப்படுத்த வேண்டியது அவசியம் என்று உணர்கிறேன்.

"இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய **கர்த்தர்**



**ஒருவரே கர்த்தர்** உபாகமம் 6 : 4"

இந்த வசனத்தை மேற்கோள் காட்டிப் பாருங்கள். **ஒருவரே கர்த்தர்** என்று எழுதியிருக்க நீங்கள் எப்படி திரித்துவம் என்று சொல்லலாம் என்று கேட்கின்றனர். இதற்கு பதில் இந்த வசனத்திலேயே இருக்கிறது. வெளியே எங்கும் போக வேண்டாம்.

நான் ஏற்கனவே எழுதி விளக்கியபடி மூவர் ஒன்றாய் இருக்கிறார்கள். எனவே நமக்கு மூன்று கடவுள்கள் அல்ல. மூவர் ஒன்றாய் இருக்கிற **ஒரே கர்த்தர்** உண்டு. இங்கு தேவனாகிய கர்த்தருக்கு. எபிரேய பதத்தில் ஏலோகினு (ELOHINOO) என்று பன்மையில் குறிக்கப்பட்டுள்ளது. (ஏலோகினு என்றால் நமது தேவர்கள் என்ற பொருள்) இந்த வார்த்தையின்படி நேரடியாக மொழி பெயர்த்தால்.

இஸ்ரவேலே கேள் நம்முடைய **தேவர்களாகிய கர்த்தர் ஒருவரே** என்று வரும். எனவே இந்த வார்த்தை சரியாக தேவனின் பன்மையைத் தான் காட்டுகிறது என்று அறிந்து கொள்ளுங்கள்.

உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே என்ற வசனத்தில் உள்ள ஒருவரே என்ற வார்த்தைக்கு என் இலக்கணத்தின்படி ஒன்று என்று அர்த்தம் கிடையாது. பன்மைத் தொகுப்புக்கும் இது பொருந்தும்.

உதாரணமாக ஆதி 2 : 24 இருவரும் **ஒரே** மாம்சமாயிருப்பார்கள் என்ற வசனத்தில் உள்ள **ஒரே** என்ற சொல் எப்படி ஒன்று என்ற ஒருமையைக் குறிக்காமல் இரண்டின் சேர்க்கையைக் குறிக்கிறதோ, அப்படியே **ஒரே கர்த்தர்** என்ற வார்த்தையும் திரித்துவ தேவனின் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

ஐயகோ! இப்படி தேவனை மூன்றாக்கி விட்டீர்களே! இது நியாயமா? என்று மனுஷீகத் தனமாகக் கேள்விகளை எழுப்பிக்

கொண்டு இருக்கிறார்கள். பிதாவாகிய தேவன் திரித்துவத்தினைக் குறித்த வெளிப்பாட்டினை அருளினது மாத்திரமல்ல. பரிசுத்த ஆவியானவர் வேதபுஸ்தகத்தில் அதிகமான இடத்தில் இதனை வெளியரங்கமாகவே சுட்டிக் காட்டியுள்ளார்.

இயேசுவின் உபதேசம், அப்போஸ்தலர்களின் பிரசங்கம், நிருபங்கள் இவைகளில் பிதா-குமாரன்-பரிசுத்த ஆவி ஆகிய மூவரையும் தனித்தனியே அடையாளம் காட்டியிருப்பதை உங்களால் வேதத்தை வாசிக்கும் போதே உணரமுடியும். உங்களுக்கு விரிவான ஞானமும், கருத்தாழமும் பெருகும்படிக்கு 10க்கும் மேற்பட்ட வசனக்குறிப்புகளைத் தொடர்ந்து கொடுக்க விரும்புகிறேன்.

★ **இயேசுவும்** ஞானஸ்நானம் பெற்று ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது. **பரிசுத்த ஆவியானவர்** புறாவைப் போல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு (பிதாவின்) **சத்தமும்** உண்டாகி நீர் என்னுடைய நேசகுமாரன் உம்மில் பிரியமாய் இருக்கிறேன் என்று உரைத்தது. லூக். 3 : 21,22

★ **குமாரனை** கனம் பண்ணாதவன் அவரை **அனுப்பின பிதாவையும்** கனம் பண்ணாதவனாய் இருக்கிறான். யோவான் 5 : 23.

★ **என்னாலேயல்லாமல்** ஒருவனும் **பிதாவினிடத்தில்** வரான். யோவான் 14 : 6

★ **நான்** என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் **பிதா** என்னில் அன்பாயிருக்கிறார். யோவான் 10 : 17

★ ஒருவன் **என்னில்** அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் **என் பிதா** அன்பாயிருப்பார். **நாங்கள்** அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். யோவான் 14 : 23 (1) என் நாமத்தினாலே



(2) பிதா அனுப்பப்போகிற (3) பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து.... நினைப்பூட்டுவார். யோவான் 14 : 26

★ (1) பிதாவினிடத்திலிருந்து (2) நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய (3) சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது .... சாட்சி கொடுப்பார். யோவான் 15 : 26

★ நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி (1) பிதா (2) குமாரன் (3) பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து .... உபதேசம் பண்ணுங்கள். மத். 28 : 19,20

★ (1) **அவர்** தேவனுடைய வலது கரத்தினால் உயர்த்தப்பட்டு (2) பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி (3) பரிசுத்த ஆவியைப் பெற்று நீங்கள் இப்போது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். அப் 2 : 33.

வரங்களில் வித்தியாசம் உண்டு. (1) ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசம் உண்டு. (2) கர்த்தர் ஒருவரே கிரியைகளில் வித்தியாசம் உண்டு. எல்லோருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற (3) தேவன் ஒருவரே I கொரி 12 : 46

இப்படி தேவனுடைய திரித்துவத் தன்மையைக் குறிக்கும் 185 வசனக்குறிப்புகள் வேத புஸ்தகத்தில் இருக்கிறது. எனவே இந்த சத்தியம்-வெளிப்பாடு தேவனால் நமக்கு அருளப்பட்டது. அதிக விளக்கங்கள் கொடுக்க முடியும். எனவே குறிப்பிட்ட பக்கங்களுக்குள் புத்தகத்தை முடிக்க வேண்டும் என்பதால் இத்துடன் நிறுத்துகிறேன்.

பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இயேசு திரித்துவத்தை

முக்கியப்படுத்திச் சொன்னார். கர்த்தராகிய இயேசுவின் கிருபை, தேவனின் அன்பு, பரிசுத்த ஆவியின் ஐக்கியம் என்று திரித்துவத்தை முக்கியப்படுத்தி பவுல் சபைகளுக்கு ஆசீர்வாதம் கூறினார்.

பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்று திரித்துவத்தின் ஒன்றிப்பை யோவானும் எழுதியிருக்கிறார்.

இப்படியிருக்க, திரித்துவக் கொள்கை அப்போஸ்தலர் காலத்தில் உண்டாகாமல் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தினால் புகுத்தப்பட்டது என்றும் இதைப் பலர் பிடித்துக் கொண்டு வழுகிப் போகிறார்கள் என்றும் சிலர் திசை திருப்புகின்றனர். இதற்கு இங்கு இரண்டு வெவ்வேறு பதிலைக் கொடுக்க விரும்புகிறேன்.

முதலாவது நாம் இதுகாறும் வாசித்து அறிந்தபடி திரித்துவம் என்பது இடையில் நுழைக்கப்பட்ட நூதன உபதேசம் அல்ல அது தேவனே மக்களுக்கு வெளிப்படுத்தினார். திருமறை அதை சாட்சியாய் அறிவிக்கிறது. இயேசு அதைப் பிரசங்கித்து உறுதிப்படுத்தினார். அப்போஸ்தலர்கள் அதையே சபைக்குப் போதித்தார்கள்.

இரண்டாவதாக ரோமன் மார்க்கம் இந்தக் காரியத்தில் என்ன செய்தது என்பதை சரித்திரப் பூர்வமாக அறிந்து கொள்ள வேண்டும்.

ரோமப் பேரரசன் கான்ஸ்டன்டைன் (இயேசு பிறந்த 300 ஆண்டுகளுக்குப் பிறகு) இயேசுவை ஏற்றுக் கொண்டு, கிறிஸ்தவனாக வாழ்ந்தது மட்டுமல்ல கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட அனுமதி வழங்கினான்.

**ஆரியத்துக்குள்ளிருந்து** வந்த ஒரு சாரார் பிதாவாகிய தேவனைப்போல் இயேசுவுக்கு தெய்வத்துவம் இல்லை என்று



கூறினர். மற்றவர்கள் தேவனில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற நபர் தத்துவம் உண்டு என்றும் மூவரும் சமதெய்வத்துவம் உள்ளவர்கள் என்றும் கூறினர்.

எனவே கி.பி. 325ஆம் ஆண்டு சிறிய ஆசியாவிலுள்ள **நிசெயா** என்ற நகரத்தில் பெரிய ஆலோசனை சங்கம் கூடி ஆராய்ந்து ஆரியர்களின் கூற்றைக் கண்டித்தது மாத்திரமல்ல. பிதா-குமாரன், பரிசுத்த ஆவி என்ற தத்துவம் வேத சத்தியம் என்பதை உறுதிப்படுத்தி ஒரு விசுவாசப் பிரமாணத்தை உருவாக்கினார்கள். இது **நிசெயா விசுவாசப் பிரமாணம்** எனப்படும்.

நடந்தது இதுதான். ரோமக் கிறிஸ்தவம் திரித்துவத்தை புதியதாக நுழைக்கவில்லை. திரித்துவம் இல்லை என்ற வாதம் எழுந்தபோது, ஆலோசனை சங்கம் கூடி ஆராய்ந்து, உண்டு என்று உறுதி செய்தது, அவ்வளவே,

எனக்கு அன்பானவர்களே! இந்தக் கடைசிக்காலத்தில் காசுக்கு ஆசைப்பட்டு கண்சொருகிப் போன சில கருத்துக் குருடர்கள், வேத புஸ்தகத்தை சரியாய்ப் படிக்காமல் எவரோ சொல்லிக் கொடுக்கும் சில வேதப் பகுதிகளை மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு உங்களைக் குழப்பலாம் கவனம் தேவை.

சத்தமாகப் பேசுவார்கள், சத்தியவான்களைப் போல் பேசுவார்கள். கவலைப்பட வேண்டாம். கலங்கவும் வேண்டாம். நமக்குப் பிதாவாகிய தேவனும், இரட்சகராகிய கிறிஸ்துவும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரும் உண்டு. இந்த மூவரின் ஒன்றிணைந்த ஐக்கியமே தேவன் என்பது, திரியேக தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# 5

## ஊழியருக்கு விவாகம் ஏற்றதா?

ஏதேனில் முதல் சிறப்பு நிகழ்ச்சி ஆதாம் ஏவாள் திருமணம். இனி நடக்கப்போகும் கடைசி சிறப்பு நிகழ்ச்சி ஆட்டுக்குட்டியானவரின் திருமணம். வேத புத்தகத்தின் ஆரம்பத்திலும் கடைசியிலும் திருமண நிகழ்ச்சி இடம் பெறுவது எத்துணை சிறப்பு பார்த்தீர்களா!

ஆகிலும் கிறிஸ்தவர்களில் சிலர் ஊழியர்கள் திருமணம் செய்யலாமா? என கேள்வி கேட்பதுமின்றி, திருமணமே ஒரு அசுத்தமான காரியத்தைப் போல் அர்த்தம் கொள்ளும்படி விமர்சிப்பதும் பரவலாகக் காணப்படுகிறது.

**ஊழியன்** என்பவர் விவாகம் செய்யாமல் இருப்பதுதான் சரி என்றும் அதற்கென சில வேதப்பகுதிகளின் அரைவாசி வசனங்களை மேற்கோள் காட்டுவதும், திருமணம் செய்த ஊழியர் சபை நடத்துவதற்குத் தகுதியிழந்து விடுகிறார் என்றும் அதே வேளையில் திருமணம் செய்யாத ஊழியர் அப்போஸ்தல ஊழியத்தின் தொடர் தகுதியைப் பெறுவதாகவும் கூறப்படுகிறது.

எனவே இந்த நிலையில் திருமணம் என்பது வசனத்தின்படி சரிதானா? பரிசுத்த வாழ்விற்கும் திருமண வாழ்விற்கும் இடையில் ஏதாகிலும் எதிர்ப்பு உண்டா? ஊழியர்கள் திருமணம் செய்து கொள்வதால் சபை நடத்துவதற்கான தகுதி குறைகிறதா? கூடுகிறதா? ஆகிய கேள்விகளுக்கு இந்த அத்தியாயத்தில் வசனத்தின்படி நடுநிலை பதிலைக் காணப்போகிறோம்.

### திருமணம் என்பது என்ன?

தேவ சாயலில் உருவாக்கப்பட்ட ஆதாமிடம் தான் உண்டாக்கின எல்லா மிருகஜீவன்களையும் தேவன் அழைத்து



வந்து பெயர் வைக்கச் சொன்னார். அவன் எல்லாவற்றிற்கும் பெயர் வைத்தான். தொடர்ந்து வேத வசனம் சொல்வதைக் கவனியுங்கள். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் உண்டாகவில்லை. (ஆதி 2 : 20)

ஊர்வன, பறவை, நடப்பன எதுவும் ஆதாமுக்கு ஏற்ற துணையாக முடியாத நிலையைப் பாருங்கள். எனவே தேவன், ஆதாமின் விலா எலும்பிலிருந்து மனுஷியை உருவாக்கி ஆதாமுக்குக் கொடுத்தார். எனவே மனைவி என்பவள் ஒரு மனிதனுக்கு வாழ்க்கைத்துணை என்பதை விட ஏற்றதுணை என்பதுதான் மிகச் சிறந்தது.

ஆதாம் ஏவாள் பாவம் செய்யாததிற்கு முன்பே அவர்கள் தேவ மகிமையால் மூடப்பட்டு இருந்த நிலைமையில் தானே அவர்களைக் குடும்பமாக இணைத்து பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று ஆசீர்வதித்தார். எனவே இல்லறம் என்பது மனிதனின் விழுகைக்குப் பிறகு உலகுக்கு அளிக்கப்பட்ட ஒன்றல்ல தேவ சாயலில் இருக்கும் போதே தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்பது மிகப்பெரிய உண்மை.

விதவிதமான விருட்சங்களை ஒரே சமயத்தில் தேவன் உண்டாக்கினார். அப்படியே பறக்கும், நீந்தும், ஊறும் உயிரினங்களைக் கூட்டம் கூட்டமாய், பவுஞ்சு பவுஞ்சாய் ஒரே சமயத்தில் உண்டாக்கினார். ஆனால் மனிதனை உருவாக்கும்போது கூட்டமாய் பொம்மைகளைச் செய்து சுவாசத்தைக் கொடுக்காமல் களிமண்ணினால் ஒரே மனிதனை செய்து சுவாசத்தைக் கொடுத்தார்.

ஏன்? ஒரு மனிதனை உயிரூட்டக்கூடிய அளவிற்கு மட்டும் தான் ஆண்டவரிடத்தில் ஜீவ சுவாசம் இருந்ததா? இல்லை அவரிடம் ஆவி பரிபூரணமாக இருந்தது. அப்படியானால் ஏன் ஆண்டவர் அப்படிச் செய்தார் வேதம் சொல்வதைக் கவனியுங்கள்.

"அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாக இருந்ததே. பின்னே ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படி தானே" மல்கியா 2 : 15

ஆம். மனிதனைத் தனியாக சிருஷ்டித்ததற்குக் காரணம் அவன் மூலம் பரிசுத்தமுள்ள சந்ததியைப் பெறும்படிதான். அதற்காகவே திருமணத் திட்டத்தையும் தேவன் உருவாக்கினார்.

எனவே திருமணம் என்பது தேவனால் ஆரம்பிக்கப்பட்டதும், தேவனால் அங்கீகரிக்கப்பட்டதும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டது மாத்திரமல்ல. அது ஒருவருக்கொருவர் ஏற்ற துணையாய் இருக்கும்படியாகவும், பலுகிப் பெருகி பூமியை நிரப்பி தேவ நோக்கத்தை நிறைவேற்றும்படியாகவும், பரிசுத்தமுள்ள சந்ததியைப் பெற்று மகிமைப்படுத்தும் படியாகவும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று.

**திருமணம் பரிசுத்தக் குலைச்சலா?**

தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் என்று இயேசு சொன்னதை (மத் 19 : 6) கவனித்துப் பாருங்கள். விவாகம் பரிசுத்தக் குலைச்சலாக இருக்குமென்றால் தேவன் நிச்சயமாக இணைத்து இருக்க மாட்டார்.

மல்கியா 2 : 11 இல் திருமணத்தைக் **கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்** என்று வேதம் சொல்லுகிறது. யூத ஜனங்கள் இந்தப் பரிசுத்தத்தைக் குலைச்சல் ஆக்கிவிட்டார்கள் எப்படி தெரியுமா? அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணி பரிசுத்தக் குலைச்சலை உண்டு பண்ணினார்கள்.

எனவே தேவனுக்குள் இருப்பவர்கள், தேவனுக்குள் இருப்பவர்களை விவாகம் செய்வது தேவனுடைய சித்தமும், தேவன் சிநேகிக்கிற ஒன்றுமாயிருக்கிறது.

முதல் முதல் உயிருடன் எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கைக் குறித்த வேத வசனங்களை வாசித்துப் பாருங்கள்.



"**.... முந்நூறு வருடம் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தது குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.** ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமல் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார்" (ஆதி 5 : 22,24)

தேவனோடு சஞ்சரிக்கக் குடும்பம் ஒரு தடையில்லை என்பதை ஏனோக்கின் வாழ்க்கை நமக்கு வெகு ஆழமாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறது.

மட்டுமா? முழு முகமாய்த் தேவனை தரிசித்த தீர்க்கதரிசியும், இஸ்ரவேலின் இரட்சகனுமாகிய மோசே விவாகம் செய்தவர் தான். மீதியான் தேசத்து ஆசாரியனாகிய எத்திரோ என்பவரின் மகளாகிய சிப்போராளை அவர் மணமுடித்து இரண்டு பிள்ளைகள் பெற்று இருந்தார்.

இவரது குடும்ப வாழ்க்கையினால் இவர் ஊழியத்தை விட்டு தேவன் அவரை விலக்கிவிடவில்லை. மாறாக எல்லா மனிதனை விட விசேஷ அழைப்பை தேவன் அவருக்குக் கொடுத்திருந்தார்.

மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து முழு இஸ்ரவேல் ஜனத்திற்காகப் பாவநிவர்த்தி செய்யும்படி பிரதான ஆசாரியப்பட்டம் பெற்ற ஆரோன் விவாகம் ஆனவரே. ஆசாரிய ஊழியத்தை அவனது சந்ததிக்கு கர்த்தர் வழி வழியாய்த் தந்ததிலிருந்து ஆசாரிய ஊழியத்திற்குக் குடும்பம் ஒரு தடையில்லை என்பதை அறிய முடிகிறதல்லவா.

தீர்க்கதரிசிகளைக் கவனித்துப் பாருங்கள். நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம். (ஏசா 8 : 18) என்று ஏசாயா தனது குடும்பத்தைக் குறித்து மகிழ்ச்சியான சாட்சியை அறிக்கையிடுகிறார்.

குடும்ப வாழ்க்கை ஏசாயாவின் தீர்க்கதரிசன ஊழியத்திற்குத் தடையில்லை என்பது மிகத் தெளிவாக தெரிகிறது அல்லவா!

எனவே தனிமனிதனின் குடும்ப வாழ்விற்கும், ஒரு ஊழியனின் ஊழிய வாழ்விற்கும் திருமணமோ, அல்லது குடும்பமோ பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

இதுவரை நான் சுட்டிக்காட்டியவைகள் பழைய ஏற்பாட்டில் உள்ள மேற்கோள்கள் மாத்திரமே. ஏன் புதிய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டவில்லை என்று நீங்கள் கேட்கலாம். திருமணம் என்பது ஒன்றுதான். இதில் பழைய ஏற்பாட்டுக் கல்யாணம் புதிய ஏற்பாட்டுக் கல்யாணம் என்று இரண்டு பிரிவு கிடையாது.

இயேசு தமது ஊழியத்தைக் கானா ஊர் கலியாண வீட்டில் அற்புதத்தை நிகழ்த்தி, தமது ஊழியத்தைத் துவங்கியது திருமணத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக் காண்பிக்கிறது. அதைப் போலவே பிரசங்கிக்கும் போது தம்மை மணவாளன் என்று உவமைப்படுத்தித் திருமண காரியத்தை உயர்த்திக் கூறி இருக்கிறார்.

சீஷனாக இருக்க விரும்புகிறவன் தன்னை வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்பின்னே வர வேண்டும் என்று இயேசுகிறிஸ்து பொழிந்தது உண்மைதான். ஆனால் அதின் உள் அர்த்தம் எதுவென்பது பலருக்குப் புரியாமல் இருப்பது வேதனைக்குரியது.

தன் ஜீவனை வெறுக்க வேண்டும் என்று எழுதியிருப்பதன் பொருள் என்ன? ஜீவனை விட்டுவிட வேண்டும் என்று அர்த்தமா தன் ஜீவனைப் பார்க்கிலும் தேவனை நேசிக்க வேண்டும் என்பது அர்த்தமா? யோசித்துப் பாருங்கள்.

அப்போஸ்தலர்கள் பற்றற்றவர்களாய் வாழ்ந்தார்கள். பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள் என்று வேதம் சொல்வது



உண்மையானாலும், அவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைகளை விட்டுப் பிரிந்து வேறுபட்டார்கள் என்றோ வேதம் சொல்லவில்லை என்பது பெரிய உண்மை.

மத்தேயு 8 : 14 ஐ வாசித்துப் பாருங்கள். அங்கே பேதுரு மாமி ஜீரமாய் இருந்தாள் என்றும் இயேசு குணமாக்கினார் என்றும் வேதம் தெளிவாகக் கூறுகிறது.

இப்படியிருக்க இந்த மாமி பேதுருவின் அப்பாவின் தங்கை என்றுகூட சிலர் சொல்லக்கூடும். ஆங்கில வேதாகமத்தில் MOTHER IN LAW (மாமியார்) என்று மிகத் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

ஆம் பிரதான அப்போஸ்தலனாகிய பேதுரு விவாகம் ஆனவர். அவரின் மாமியாருக்குக்கூட இயேசு அற்புதம் செய்து இருந்தார். இந்தப் பேதுருவுக்குக் கேபா என்று மற்றொரு பெயர் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். (யோவான் 1 : 42)

இந்தப் பேதுருவும் அவரது நண்பர்களும் தனித்தனியாக ஊழியத்திற்குப் போகாமல் தங்கள் மனைவியருடன் சென்றார்கள் என்பதைப் பவுல் தனது நிருபத்தில் மேற்கோள் காட்டி எழுதியிருக்கிறார்.

“மற்ற **அப்போஸ்தலர்களும்,** கர்த்தருடைய சகோதரரும், **கேபாவும்** செய்கிறது போல **மனைவியாகிய** ஒரு சகோதரியைக் கூட்டிக் கொண்டு திரிய எங்களுக்கு அதிகாரம் இல்லையா?” I கொரி 9 : 5

இந்த வசனத்தின்படி அப்போஸ்தலர்கள் திருமணம் செய்து கொண்டவர்கள் என்றும் அவர்கள் அப்போஸ்தல ஊழியத்தில் உடன் இருந்தார்கள் என்றும் நீங்களே நிதானித்து முடிவெடுத்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

மேலே சொன்ன வசனத்தில் **மனைவியாகிய ஒரு சகோதரி** என்ற பகுதியை சுட்டிக்காட்டி முதலில் அவர்கள் மனைவிகள் தான். அப்போஸ்தலர்கள் அதன்பின் அவர்களை

சகோதரிகளாகத்தான் நடத்தினார்கள் என்று சிலர் விளக்கம் தருவார்கள். அப்படி அல்ல, **விசுவாசத்திற்குள் வந்த மனைவி** (A beleiving wife) என்றுதான் அதின் பொருளே தவிர வேறு அர்த்தம் ஏதும் இல்லை.

இயேசுவின் ஊழியத்திலும் பவுலின் நிருபத்திலும் பேதுருவின் திருமண வாழ்வு உறுதி செய்யப்பட்டுள்ளது. திருமறைக்கு வெளியே உள்ள பாரம்பரிய வழக்குத் தழுவிய நூல் குறிப்பில் அவரின் இறுதி வாழ்வு வரை அவரது மனைவி உடன் இருந்ததாகவும், மனைவிக்கு முன்பாகவே பேதுரு மரித்துவிட்டார் எனவும், பேதுருவின் மனைவியின் பெயர் கன்கார்டியா எனவும் கூறுகிறது.

(இந்த கன்கார்டியா என்ற பெயர் நான் வைக்கவில்லை **மணவாட்டி** ஜுன் மாத இதழில் கடைசிப்பக்கத்தில் இந்தப் பெயர் குறிப்பு வந்துள்ளது)

அப்போஸ்தலர்களின் போதனைகளில் குடும்ப வாழ்க்கை முக்கியப்படுத்தப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல, ஊழியத்தின் பல நிலைகளில் உள்ள, கண்காணிகள் (BISHOP) உதவிக்காரர்கள், ஆகியோருக்கு சேர்த்தே எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒரு காரியம்.

**கண்காணி** என்பது விசுவாசிகளில் ஒரு மூத்த நபர். அவர் ஊழியர் அல்ல, பள்ளிக்கூடத்தில் வளர்ந்த பையனை வகுப்புத் தலைவனாக வைப்பது போல் இந்தக் கண்காணியும் விசுவாசிகளுக்கு வழங்கப்படும் பொறுப்பு இவர்கள் ஊழியர்கள் அல்ல என்று ஒரு சபைப்பிரிவின் விளக்கம் கொடுக்கின்றனர்.

இந்த விளக்கம் உண்மையா என்றால் இல்லை என்று உடனே சொல்லி விடலாம். இதே **கண்காணி** என்ற வார்த்தை அப்போஸ்தல நடபடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள இடத்தைச் சுட்டிக் காட்டுகிறேன் கவனித்துப் பாருங்கள்.



.... உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட **தமது சபையை மேய்ப்பதற்குப்** பரிசுத்த ஆவி உங்களைக் **கண்காணிகளாக** வைத்த மந்தை முழுவதையுங்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். (அப். 20 : 28)

இந்த வசனத்தில் கண்காணி என்பது மந்தையின் மேய்ப்பர்களைக் குறிக்கிறது என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். சரி, செய்திக்கு வருவோம். பவுல் ஊழியர்களுக்கென எழுதிய I, II தீமோத்தேயு, தீத்து ஆகிய மூன்று நிருபங்கள் ஊழியரின் திருமணத்தைக் குறித்து வெளிப்படையாகவே பேசுகிறது.

★ கண்காணியானவன் ..... ஒரே மனைவியை உடைய புருஷனும்.... போதக சமர்த்தனுமாய் இருக்க வேண்டும். I தீமோ 3 : 2

★ தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், **தன் பிள்ளைகளை** சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்ப்படியப் பண்ணுகிறவர்களுமாய் இருக்க வேண்டும். I தீமோ 3 : 4

★ குற்றம் சாட்டப்படாதவனும் ஒரே மனைவியை உடைய புருஷனும்.... விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையை கண்காணியாக ஏற்படுத்தலாம். தீத்து 1 : 6

எனவே ஒரு ஊழியர் (எந்த ஊழியம் செய்தாலும்) அவர் விவாகம் செய்து கொள்வது ஏற்புடையதே தவிர எந்த நிலையிலும் குறைவான ஒன்றல்ல என்பதை சொல்ல விரும்புகிறேன்.

அதே வேளையில் திருமணமாகாத நிலையிலிருந்து ஊழியம் செய்பவர்களைக் குறைவாகவோ, தவறாகவோ கருதிவிட முடியாது – கூடாது. ஏனெனில் ஒரு சிலருக்குக் கர்த்தர்

இப்படிப்பட்ட கிருபையைக் கொடுக்கிறார் என்பது உண்மை. அப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட கிருபையின்படி விவாகம் செய்யாமல் ஊழியம் செய்வது நல்லது.

கர்த்தர் இந்தக் கிருபையை சிறப்பாக சிலருக்குத்தான் கொடுக்கிறார். இதைப் புரியாமல் உபதேசமாக்கி அழைப்பும், கிருபையும் இல்லாமல், திருமணம் வேண்டாம் என்று வறட்டுப்பிடிவாதம் செய்தால் வாழ்வின் கடைசியில் ஆக்சிடெண்ட் நடப்பது நிச்சயம்.

திருமணம் ஆன ஊழியருக்கும் திருமணம் ஆகாத ஊழியருக்கும் மகிமையில் எந்த வித வித்தியாசம் இருக்காது. மோசேயும், எலியாவும் மறுரூப மலையில் இயேசுவுடன் பேசிய காட்சியை நினைத்துப் பாருங்கள். மரித்த பரிசுத்தவானாகிய மோசேயும், உயிருடன் எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவானாகிய எலியாவும் ஒரே விதமான மகிமை பெற்றதற்கு இது உதாரணம் என்று சிலர் சொல்லக்கூடும் இஃது உண்மையே.

அத்தோடு நின்றுவிடாமல் அடுத்த கோணத்தில் இந்த காட்சியை தியானித்துப் பாருங்கள். மோசே திருமணமாகி பிள்ளைகள் பெற்றெடுத்த பரிசுத்தவான். எலியாவோ திருமணம் ஆகாத நிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டவர் ஆக, திருமணம் ஆனவரும் திருமணம் ஆகாதவரும் மறுரூபமும் மகிமையும் அடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடைசியாக எனக்கன்பானவர்களே தேவனிடமிருந்து தனிப்பட்ட விதத்தில் கட்டளை பெற்றுக் கொண்ட தனிநபர்களைத் தவிர மற்ற எல்லா ஊழியர்களும் திருமணம் செய்து கொள்வது உசிதமானதும் கர்த்தருக்கு மகிமையானதுமாய் இருக்கிறது என்று அன்புடன் வேத வசனங்களை முன்னிட்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

# 6

## அந்நிய பாஷை அவசியமா? ஆதாரமுண்டா?

'அபிஷேகம்' 'அந்நியபாஷை' இவை இரண்டுமே இன்று வரை விமர்சித்து முடியாத காரியங்கள். ஆனால் எதையுமே திறந்தமனதுடன், குழந்தை உள்ளத்துடன் வசனத்தை வாசித்து அறிந்தால் குழப்பமில்லாமல் புரிந்து கொள்ள முடியும்.

பரிசுத்தாவியின் அபிஷேகத்தில் அதிகமான விமர்சனத்துக்குள்ளாகிற அந்நிய பாஷையைக் குறித்துத்தான் இந்த அதிகாரம் முழுவதும் நாம் தியானம் பண்ணப் போகிறோம்.

இந்த அந்நியபாஷை என்ற வார்த்தையே எனக்கு அந்நியபாஷையாக இருப்பதால் தமிழில் இதை அயல்மொழி என்று குறிக்க விரும்புகிறேன்.

அந்நியபாஷை, நவநாவு, மறுபாஷை, அயல்மொழி போன்ற வார்த்தைகள் ஒரே காரியத்தையே குறிக்கும்.

ஆவியின் அபிஷேகம் பெறும்போது நவ நாவுகளில் பேசுவதை சிலர் பலவிதமாக விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு சபைப் பிரிவும் தத்தம் நிலைமைக்கும் ஏற்ப தங்கள் விளக்கங்களை அளிக்கின்றன. அவைகள் வேத வசனத்தின் அடிப்படையில் விளக்கம் தரப்படாமல் அந்த சபைப் பிரிவின் ஸ்தாபக கர்த்தாக்களின் அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறபடியால் அவைகள் பூரணமாகாது.

நவநாவுகள் அப்போஸ்தலர் காலத்தோடு முடிந்து விட்டது. எனவே அவை தேவையில்லையென்று ஒரு சாராரும் கடைசிக்காலத்தில் எழும்பும் தவளையின் ஆவி அஃதே என்று ஒரு சிலரும், உணர்ச்சியின் மிகுதியால் வெளிப்படும் பரவசப் பேச்சுக்கள் என்று சிலரும் சொல்கின்றனர்.

எனவே இந்த அந்நியபாஷை அவசியம்தானா? அதற்கு வசனத்தின்படி ஆதாரம் உண்டா? என்பதை முதற்கண் அறிந்திடல் வேண்டும்.

(i) முதன் முதல் இந்த அந்நிய பாஷையைக் குறித்த வாக்குத்தத்தத்தை நமது பிதாவானவர்தான் கொடுத்தார். பழைய ஏற்பாட்டில் ஏசாயா 28 : 11,12 வாசித்துப் பாருங்கள். "பரியாச உதடுகளினாலும் **அந்நிய பாஷைகளினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்.** இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்"

(ii) இந்த வசனத்தின்படி தேவன் தாம் தெரிந்து கொண்ட ஜனத்தோடு அந்நியபாஷையில் பேசுகிறார் என்றும் அது தேவன் சொன்னபடி பரியாச உதடுகளால் இருக்கும் என்றும் அறிந்து கொள்ளுங்கள்.

(iii) அந்நிய பாஷையைக் குறித்து இரண்டாவதாக மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே, மாற்கு எழுதின சுவிசேஷம் 16 : 17ஐ வாசித்துப் பாருங்கள், "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங் களாவன; என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்."

**விசுவாசிகள் நவமான பாஷை பேசுவார்கள் என்பது இயேசு சொன்ன வார்த்தை. இதை நாம் அவசியம் இல்லை என்று தள்ளிவிட முடியுமா?**

அந்நிய பாஷை குறித்து பரிசுத்த ஆவியானவர் தமது பரிசுத்தவான்களை ஏவி எழுதியிருக்கும் வசனத்தை வாசித்துப் பாருங்கள்.

"அவர்கள் **எல்லோரும்** பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே **வெவ்வேறு பாஷைகளிலே** பேசத் தொடங்கினார்கள்." (அப் 2 : 4)

மேற்கண்ட வசனத்தின் மூலம் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தபோது ஆவியினால் நிரப்பப்பட்ட அத்தனை பேரும் மறுபாஷைகளில் பேசினார்கள் என்பது



தெரிகிறதல்லவா.

இப்படியிருக்க பிதாவினால் வாக்குச் செய்யப்பட்டதும் இரட்சகர் இயேசுவினால் உறுதி செய்யப்பட்டதும் பரிசுத்த ஆவியினால் பெந்தெகொஸ்தே நாளில் பகிர்ந்தளிக்கப் பட்டதுமான **பற்பல பாஷை** பேசும் கிருபை தேவையில்லாத ஒன்று என்று எவர் சொல்லக்கூடும்?

அபிஷேகத்தையும் அந்நியபாஷையையும் இரண்டாகப் பிரித்துவிட முடியாது. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் இறங்கினபொழுது எல்லாரும் அந்நியபாஷை பேசியது போலவே தாம் அபிஷேகிக்கும் யாவருக்கும் இன்றளவும் அந்நிய பாஷையை தேவன் அருளுகிறார்.

கூடுதலாக சொல்வோமானால் ஒரு மனிதன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டதற்கு அவர் பேசும் அந்நிய பாஷையே அடையாளமாக இருக்கிறது.

ஒரு சிலர் பெந்தெகொஸ்தே அன்று மாத்திரம்தான் அப்படி நடந்தது. அதற்குப்பின் அப்படிப்பட்ட அனுபவம் இல்லை என்கிறார்கள். பெந்தெகொஸ்தே நாள் வந்த பின் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் கழித்து அப்போஸ்தலனாகிய பேதுரு கொர்நேலியு என்பவன் வீட்டில் பிரசங்கம் செய்யும்போது எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் என்ற வேதப்பகுதி மிகச் சரியான ஆதாரமாய் இருக்கிறது.

"இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கை யில் வசனத்தைக் கேட்டவர்கள் **யாவர் மீதும்** பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும் பேதுருவோடு கூட வந்திருந்த விசுவாசிகள் கேட்டார்கள்" (அப் 10 : 44 முதல் 46)

**அன்று கொர்நேலியு வீட்டார் ஆவியினால் நிரப்பப்பட்டதற்கு அவர்கள் பேசின பற்பல பாஷையே அடையாளமாய் இருக்கிறது.**

(iv) இப்படியே பல ஆதாரங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். எபேசுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் வந்தபொழுது அபிஷேகம் பெறாத விசுவாசிகள் மேல் கைகளை

வைத்து ஜெபித்தார். (அப்போ 19 : 17) அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அனைவரும் அந்நிய பாஷையிலே பேசினார்கள். இதுவும் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற சம்பவம்.

எனவே பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதெல்லாம் விசுவாசிகள் மீது இறங்கினாரோ அப்பொழுதெல்லாம் அந்த விசுவாசிகள் முதலாவது அந்நிய பாஷையைப் பேசினார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

சிலர் வேத வசனங்களை ஒரு பக்கமாய் பிடித்துக் கொண்டு சிந்தனைக்கு இடம் தராமல் தங்கள் இருதயத்தின் நினைவுகளையே உபதேசமாகத் திணிப்பது வாடிக்கையாகி விட்டது. அப்படிப்பட்டவர்கள், பரிசுத்த ஆவி இறங்கினார் என்று எழுதி அந்நிய பாஷையில் பேசினார்கள் என்று கூடுதல் குறிப்பு இல்லாத வேத பகுதிகளை எடுத்துக்காட்டி பார்த்தீர்களா! "அந்நிய பாஷை இல்லாமல் ஆவியின் அபிஷேகம்" என்று அலட்டிக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் எடுத்துக்காட்டுகிற வேத பகுதியை உங்கள் முன்பு வைக்க விரும்புகிறேன். நேரம் இருக்குமானால் நீங்களே அந்த வேதபகுதியை எடுத்து வாசித்துப் பாருங்கள். (இது பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற சம்பவம்)

அப்போஸ்தலர் 8ஆம் அதிகாரம் 15 முதல் 19 வசனம் வரை வாசித்தால் சமாரியாவில் உள்ள மக்கள் பரிசுத்த ஆவியைப் பெறாததைக் கண்டு பேதுருவும் யோவானும் கைகளை வைத்து ஜெபித்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள் என்று எழுதியிருக்கிறது.

இந்தப் பகுதியை மேற்கோள்காட்டி அந்நிய பாஷையில் அவர்கள் பேசவில்லை என்பது வறட்டு வாதமே தவிர வசன ஆதாரம் கிடையாது. நான் சொல்கிறேன் அவர்கள் நிச்சயமாக அந்நிய பாஷையில் பேசியிருப்பார்கள். அப் 8 : 18,19 வாசித்துப்



பாருங்கள். அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவியானவர் தந்தருளப்படுகிறதை சீமோன் கண்ட போது அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டு வந்து.... எனக்கும் இந்த அதிகாரம் வேண்டும் என்றான்.

இந்த வசனத்தை நன்றாக சிந்தித்துப் பாருங்கள். அப்போஸ்தலர் கைகளை வைத்தார்கள். அப்பொழுது ஆவியானவர் இறங்கினதை சீமோன் பார்த்தான். அதன் அர்த்தம் என்ன? ஆவியானவர் இறங்கினதை எப்படிப்பார்க்க முடியும்? நிச்சயம் அவர்கள் அந்நிய பாஷையில் பேசியிருப்பார்கள் என்று விளங்குகிறதல்லவா.

பரிசுத்த ஆவி ஒரு மனிதன் மேல் இறங்கும் போது அவன் பேசுவதையும் நிரப்பப்படும் போது அவர்கள் செய்கையில் வித்தியாசத்தையும் காண முடியும். அப்போஸ்தலர் 2 : 33 இல் பெந்தெகொஸ்தே அன்று பேதுரு எழும்பிப் பிரசங்கம் செய்யும் போது "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு பிதா அருளின வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று நீங்கள் **இப்போது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்**" என்ற வார்த்தையை உங்கள் சிந்தைக்கு விட்டு விடுகிறேன்.

பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் என்று தெளிவாக எழுதி அந்நியபாஷை பேசினார்கள் என்று எழுதப்படாததால் அவர்கள் பேசவில்லை. எனவே தேவையில்லை என்ற அவசர முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

(V) சவுல் என்கிற பவுல் வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள். (அப். 9 : 16 முதல் 17) பவுல் இரட்சிக்கப்பட்டு பார்வையில்லாதவனாய் இருந்தபோது அனனியா என்கிற சீஷன் கர்த்தரின் வார்த்தைப்படியே ஜெபித்தான். அப்பொழுது அவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான்.

உடனே, நிரப்பப்பட்டான் என்று எழுதியுள்ளது எனக்கேட்டு விடாதீர்கள். அனனியாவைக் கர்த்தர் அனுப்பினதற்கு நோக்கமே, ஒன்று அவன் பார்வையடைய வேண்டும். மற்றொன்று அவன் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும்.

அனனியா கை வைத்தவுடன் பார்வை வந்ததால் பரிசுத்த ஆவியும் வந்தது என்று சொல்லியா தெரிய வேண்டும்.

இங்கு நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் பவுல் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட போது அந்நிய பாஷை பேசியதாகக் குறிப்பு இல்லை. எனவே அவர் அந்நியபாஷை பேசவில்லை என்று நாம் சொல்லிவிட முடியுமா? வாசித்துப் பாருங்கள் வசனத்தை. உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் அந்நியபாஷை பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். (I கொரி 14 : 18) என்று எத்தனை மகிழ்கிறார் பாருங்கள்.

இத்தனைக்கும் பிறகும் சிலர் விடுவதாக இல்லை. முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவது போல பவுல் ஏதோ ஒரு காரியத்திற்காக சொன்ன வசனத்தின் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு அந்நியபாஷை பேச தடை உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்நிய பாஷைகளானாலும் ஒழிந்து போம் I கொரி 13 : 8. இந்த வார்த்தை தான் அந்நிய பாஷைக்கு எதிராக வீசப்படும் முதல் அஸ்திரம். ஆனால் சற்று இந்த வசனத்தை முழுமையாக வாசித்துப் பாருங்கள்.

அன்பு ஒருக்காலும் ஒழியாது தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷாகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம். I கொரிந்தியர் 13 : 8

I கொரிந்தியர் 13-இல் பவுல் மிக முக்கியப்படுத்திக் காண்பிக்க விரும்புவது அன்பு சபைக்கு வேண்டும் என்பதே. அன்பு பூலோகத்திலும் இருக்கும் பரலோகத்திலும் இருக்கும். அது நித்தியமானது.

அதே சமயம் கர்த்தரின் வருகையில் அல்லது மகிமையில் (நிறைவானது வரும் போது) தீர்க்கதரிசனம் தேவைப்படாது. அந்நியபாஷை தேவைப்படாது. நமது அறிவும் பயன்படாது. எனவே தான் அவைகள் ஒழிந்துபோம் என்றார்.

கோபித்துக் கொள்ளாதீர்கள். அந்நிய பாஷை ஓய்ந்து போய்விட்டது என்று கேட்போரே மிகுந்த அடக்கத்துடன் கேட்கிறேன். உங்களுக்கென்ன அறிவு ஒழிந்து போய்விட்டதா?



எனக்கன்பானவர்களே இயற்கைக் காட்சிகளை இயற்கைக் கண்களோடு பாருங்கள், அதன் நிஜத்தன்மை தெரியும். மஞ்சள் கண்ணாடியோ சிவப்புக் கண்ணாடியோ மாட்டிக் கொண்டால் மாயத்தோற்றத்தைப் பிறப்பிக்கும். அப்படியே வேத வசனங்களை சொந்த விருப்பு வெறுப்பின்றி கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என ஜெபத்துடன் வாசியுங்கள். ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

பரிசுத்த ஆவி என்பது சிலர் சொல்கிறபடி தவளையின் ஆவியல்ல. எந்த ஒரு தெரியாத மொழியும் நமக்குப் பைத்தியமாகத்தான் தோன்றும். நடைமுறையில் நமது தமிழகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தமிழ்மொழியை செந்தமிழ் என்று சொல்லுகிறவர்கள். இந்தியைக் குறித்து எவ்வளவு இழிவாகச் சொல்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

புரியாததும் வெறுப்புமே மற்ற மொழிகளை இப்படிப் பேசச் செய்கிறது. அதைப் போல அயல்மொழி பேசுவதை வெறுப்பவர்களும் விரும்பாதவர்களும் வேத வசனத்தைத் தவறாகப் பயன்படுத்தி தவளையின் ஆவி இதுதான் என்று பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.

அப்படியானால் இதற்கு சரியாகப் பதில் எப்படி செய்வது என்ற திகைப்பு ஏற்படலாம். கவலைப்பட வேண்டியதில்லை. ஆவியானவர் கலகத்தின் தேவனல்ல. சமாதானத்தின் தேவன். அவர் கூறும் பதிலை வேத வசனத்தில் தெளிவாகக் கண்டு கொள்ளுங்கள்.

தவளைக்கு ஒப்பான ஆவிகள் இப்பொழுது இல்லை. இப்போது வராது. வெளிப்படுத்தல் 16 : 13,14 இல் தான் இந்தத் தவளையின் ஆவியைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. "அப்பொழுது வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக்கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்."

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் சபை எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இந்தப் பூமியில் நடக்கும் அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியின் இடைக்காலத்தில் வெளிப்பட்டு அர்மகெதோன் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்யும்.

ஒரு சிலர் இன்றைக்கு நடக்கும் பரிசுத்த ஆவியின் அற்புதங்களை இந்தத் தவளையின் ஆவி செய்யும் அற்புதங்கள் என்று போதிப்பது வேதனைக்குரியது.

அப்போஸ்தலர் நடபடிகளில் 10 : 38 இல் பேதுரு "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்த படியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்."

ஆனால் இதைப் புரிந்து கொள்ளாத மாற்றார் என்ன சொன்னார்கள் தெரியுமா, இவன் பிசாசுகளின் தலைவன் பெயல்செபூல் என்றெல்லாம் அழைத்தார்கள். இயேசுவுக்கே இந்த ஏச்சும் பேச்சும் வந்தது உண்மை என்றால் நமக்கு வருவது ஒன்றும் பெரிய காரியம் இல்லை.

ஆவிக்குரிய வரங்கள் என்பது ஆதிசபைக்கு மாத்திரம் அருளப்பட்ட அற்ப ஆயுசு உள்ள வாக்குத்தத்தம் அல்ல.

இதுவரை அந்நியபாஷை ஆவியானவரின் அநுக்கிரகம் என்றும் அவசியம் என்றும் கண்டீர்கள். இப்போது அது எத்துணை மேன்மையான அனுபவம் என்பதை சற்று விளக்க விரும்புகிறேன்.

பரிசுத்த ஆவியானவர் சபைக்கு அருளிய 9 வரங்களைக் குறித்து I கொரிந்தியர் 12 : 8,9,10 வசனங்களில் எழுதப்பட்டு இருக்கிறது. இந்த வரங்களை வரிசைப்படுத்தி எழுதுகிறேன். கவனியுங்கள்.

I கொரிந்தியர் 12 : 8-10

1. ஞானத்தைப் போதிக்கும் வசனம்
2. அறிவை உணர்த்தும் வசனம்
3. விசுவாசம்



4. குணமாக்கும் வரங்கள்
5. அற்புதங்களைச் செய்யும் சக்தி
6. தீர்க்க தரிசனம்
7. ஆவிகளைப் பகுத்தறிதல்
8. பற்பல பாஷை பேசுதல்
9. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்

இந்த ஒன்பது வரங்களையும் மீண்டும் வாசித்துப் பாருங்கள். உங்களால் ஒன்றைக் கண்டுபிடிக்க முடியும். இந்தப் பட்டியலில் முதல் ஏழு வரங்களும் பழைய ஏற்பாட்டில் பல பக்தர்களிடத்தில் கிரியை செய்திருக்கிறது. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு அருளப்படாத இரண்டு வரங்களைக் கர்த்தர் புதிய ஏற்பாட்டு சபையாகிய தனது மணவாட்டிக்கு அருளி இருக்கிறார் அது.

1. பற்பல பாஷை பேசுதல்
2. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்

பிரியமானவர்களே, தேவன் புதிய ஏற்பாட்டு சபைக்கு சிறப்பாக அருளிய இந்த வரங்களை வேண்டாம் என்று சொல்வதோ அல்லது வெறுப்பதோ நியாயமா!

இன்னும் இயேசுகிறிஸ்து கடைசியாகச் சொன்ன வேதப்பகுதியை உங்களுக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மாற்கு 16 : 17-ஐ சரியாக வாசித்துப் பாருங்கள். அங்கே தன்னை விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள் என்னென்ன என்பதை இயேசு சொல்லியுள்ளதைக் கீழே தருகிறேன். கவனியுங்கள்.

1. பிசாசுகளைத் துரத்துவார்கள்
2. நவமான பாஷைகளைப் பேசுவார்கள்
3. சர்ப்பங்களை எடுப்பார்கள்
4. சாவுக்கேதுவானவைகள் சேதப்படுத்தாது
5. வியாதியஸ்தர்களை குணமாக்குவார்கள்

இந்தப் பட்டியலில் ஒரு காரியம் உண்டு. இரண்டாவது அடையாளமாகிய நவமான பாஷைகளைப் பேசுதல் தவிர மற்ற

4 அடையாளங்கள் உங்களில் நிறைவேற வேண்டுமானால் நீங்கள் தனியே இருந்தால் நிறைவேறாது.

அவைகள் நிறைவேற பிசாசு பிடித்தவன், சர்ப்பம், சாவுக்கேதுவான உணவு உட்கொண்ட சூழ்நிலை, வியாதியஸ்தர் இவர்கள் தேவை. இவர்கள் இருந்தால் நீங்கள் இயேசுவின் நாமத்தில் கிரியை நடப்பித்து தேவனை மகிமைப்படுத்த முடியும்.

ஆனால் எல்லோருமே நல்ல நிலையில் இருக்கும்போது அந்த இடத்தில் என்ன செய்ய முடியும்? இரண்டாவதாக சொல்லப்பட்ட நவமான பாஷையை பேச முடியும். நன்றாகக் கவனியுங்கள். மற்ற நான்கு அடையாளங்கள் நிகழ மாறுபட்ட சூழ்நிலை அல்லது மற்றொரு நபர் வேண்டும். ஆனால் நவமான பாஷையை யார் இல்லாவிட்டாலும் நீங்கள் தனியே பேசலாம். அது பெரிய அடையாளமாக இருக்கும்.

இயேசு சொன்ன ஐந்துவித அடையாளங்களில் எல்லா சூழ்நிலையிலும் வெளிப்படுத்தக்கூடிய இந்த நவமான பாஷை பேசுதல் எத்துணை முக்கியமானது என்று யோசித்துப் பாருங்கள்.

**அந்நிய பாஷை அலட்சியப்படுத்தக்கூடிய ஒன்றல்ல :** அவசியம் தேவையான ஒன்று.

பிதா வாக்குத்தத்தம் செய்த
இயேசு அடையாளமாய்ச் சொன்ன
பரிசுத்த ஆவி ஈந்த
அப்போஸ்தலர் யாவரும் பேசின
ஆதித் திருச்சபை அனுபவித்த

இந்த அனுபவத்தை விட்டு விடாதீர்கள். கடைசியாக அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய வசனத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்தி இந்த அதிகாரத்தை முடிக்கிறேன்.

**நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளை பேசும்படி விரும்புகிறேன். I கொரிந்தியர் 14 : 5**

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,
**Pr. அலெக்ஸ் தினகரன்**